# SUNDAY SCHOOL SYLLABUS

# TAMIL

# STANDARD 9

# 1997

## பொருளடக்கம்


1. இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி I)
2. இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி II)
3. இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி III)
4. இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி IV)
5. இஸ்ரவேலரின் பிரயாணம் (V)
6. இஸ்ரவேலரின் பிரயாணம் (VI)
7. இஸ்ரவேலரின் பிரயாணம் (VII)
8. பரி. பவுலின் மூன்றாம் சுவிசேஷப் பிரயாணம்
9. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (பகுதி I)
10. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (பகுதி II)
11. வெளிப்படுத்தின விசேஷத்திற்கு ஒரு முன்னுரை
12. உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி I)
13. உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி II)
14. உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி III)
15. இரத்தத்தினால் உண்டாகும் பரிசுத்தமாகுதல்
16. திரித்துவ தேவன் (பகுதி I)
17. திரித்துவ தேவன் (பகுதி II)
18. கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியம்
19. தேவனுடைய வாசஸ்தலங்கள் (பகுதி I)
20. தேவனுடைய வாசஸ்தலங்கள் (பகுதி II)


### பாடம் 1

### இஸ்ரவேலரின் பிரயாணம்

(பகுதி I)

எகிப்திலிருந்து விடுதலை

இஸ்ரவேலரின் பிரயாணம் நம் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு நிழலாட்டமாயிருக்கிறது. அவர்களுடைய பிரயாணத்தில் அவர்களுக்குச் சம்பவிதவைகள் யாவும் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தன. நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி அவை எழுதப்பட்டிருக்கின்றன. (I கொரி. 10:1,11).

எகிப்து, இந்தப் பாவ உலகத்திற்கு நிழலாட்டமாயிருக்கிறது. பார்வோன், இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசுக்கு அடையாளமாயிருக்கிறான்.

## 1. இஸ்ரவேலர் எகிப்தை விட்டதின் காரணங்கள்:

(a) கடினமான உழைப்பினால் அவர்களுடைய ஜீவன் அவர்களுக்குக் கசப்பாயிருந்தது (யாத். 1:14): நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு, பாவத்துக்கு அடிமைகளாயிருந்தோம். பாவத்தின் சம்பளம் மரணம் என்று கூறப்பட்டுள்ளது (ரோமர் 6:23). மரணத்தின் அதிகாரியாகிய பிசாசானவன் நம் ஜீவனைக் கசப்பாக்கும்படி, வியாதிகள், கஷ்டநஷ்டங்கள், மற்றும் சாபங்கள் போன்ற ஆளோட்டிகளை நம்மேல் நியமித்தான். மேலும், அநேக வேதனைகளாலே நம்மை உருவக் குத்தின பண ஆசையினிமித்தமாக (I தீமோ. 6:10) நாம் உலகத்ததையும் சேவித்துக் கொண்டிருந்தோம். நாம் பண ஆசையை விட்டோடும்படி சொல்லப்பட்டுள்ளது (I தீமோ. 6:11). இயேசு, "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று சொன்னார் (மத். 11:28).

(b) அவர்கள் தங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறும்படியாக (யாத். 2:23 ; 3:8): நம் ஜீவியத்தில் நாம் பாவத்துக்கும் (யோவான் 8:34), பிசாசுக்கும் (எபி. 2:14, 15), உலகத்துக்கும் (கலா. 1:4) அடிமைகளாயிருந்தோம்.

(c) வனாந்தரத்தில் தேவனுக்குப் பலி செலுத்தும்படியாக (யாத். 3:18): நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் தேவசித்தம் செய்யும்படியாக நம் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. அதற்காக நாம் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் இருக்க வேண்டும் (ரோமர் 12:1,2 ; எபி. 10:5-7).

(d) அவர்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதாக தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் (யாத். 3:8): நம் ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, அவருடைய திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார் (II பேதுரு 1:4).

## 2. எகிப்திலிருந்து அவர்கள் விடுதலையாக்கப்பட்ட விதம்:

(a) கர்த்தருடைய பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா தண்டனைகளினாலும் (யாத். 6:1,6): பார்வோன் தன் இருதயத்தை கடினப்படுத்தி, ஜனங்களைப் போகவிடுவதற்கு மறுத்த ஒவ்வொரு முறையும், தேவன், பார்வோனையும், எகிப்து தேசத்தையும் பின்வரும் காரணங்களினிமித்தமாக வாதித்தார்:

(i) தேவனாகிய கர்த்தரை (யோகோவா) அன்றி வேறே தேவர்கள் இல்லை என்பதை எகிப்தியர் அறிந்துகொள்ளும் படியாக (யாத். 7:5).

(ii) தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை என்று பார்வோன் அறிந்துகொள்ளும்படியாக (யாத். 8:10).

(iii) இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் ஒரு வித்தியாசம் உண்டாக்கும்படியாக (யாத். 8: 22,23).

(iv) 'யேகோவா' வாகிய தங்கள் தேவனாகிய கர்த்தரே தங்களை விடுதலையாக்குகிறவர் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் அறிந்துகொள்ளும்படியாக.

(v) தேவனுக்கு மகிமை உண்டாகும்படி, தம்முடைய மீட்பின் கிரியைகளை வெளிப்படுத்திக் காண்பிக்கும்படியாக.

தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து தம்முடைய ஓங்கிய புயத்தினாலும் பலத்த கையினாலும் விடுதலையாக்கினது. ரோமர் 15:18, 19 - இல் விவரிக்கப்பட்டுள்ளவற்றிற்கு ஒரு அடையாளமாகக் காணாப்படுகிறது. புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும் பொருட்டு, தேவன் தாமே அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் நாம் பிரசங்கிக்கிற சுவிசேஷத்திற்குச் சாட்சி கொடுத்திருக்கிறார் (எபி. 2:4).

(b) பஸ்காவை ஆசரிப்பதன் மூலமாக (எபி. 11:28): ஒவ்வொரு வீட்டாரும் ஒரு ஆட்டுக்குட்டியை அடித்ததின் மூலம் பஸ்காவை ஆசரித்தனர். புதிய ஏற்பாட்டில், பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறார் (I கொரி. 5:7 ; எபி 2:9). "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5).
ஆகையால், நாம் இயேசுவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு நம்முடைய பாவங்களுக்காக மெய்யாகவே மனஸ்தாபப்பட்டு அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடும்போது, அவருடைய இரத்தம் நம்மைச் சுத்திகரிக்கிறது (I யோவான் 1:7,9). நாம் அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பைப் பெற்றுக் கொள்ளுகிறோம் (எபே. 1:7).

**போதனை:**

இஸ்ரவேல் ஜனங்களுடைய கூக்குரலைக் கேட்டு, அவர்களுடைய உபத்திரவங்களிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் பஸ்கா ஆசரித்ததின் மூலம் தேவன் அவர்களை விடுதலையாக்கினதுபோல, நம்முடைய பாவங்களுக்காக நாம் மனஸ்தாபப்பட்டு, இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரை நோக்கிக் கூப்பிடும்போது, நம்மை எல்லாவித அடிமைத்தனங்களிலிருந்தும் விடுதலையாக்க அவர் வல்லவராயிருக்கிறார்.

**மனப்பாடம்:** மத்தேயு 11:28 ; I யோவான் 1:9

## பாடம் 2

# இஸ்ரவேலரின் பிரயாணம்

(பகுதி II)

### வனாந்தரத்திற்குள் தப்பி ஓடிப்போனதும் சிவந்த சமுத்திரத்தைக் கடந்ததும்

பஸ்காவை ஆசரித்த பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் ராமசேசை விட்டு, கால்நடையாய்த் தங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள் (யாத். 12:37). இது நம் ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்பத்தில், நாம் முதலாவதாக இரட்சிக்கப்படும்போது, நமக்குள் காணப்படும் தாழ்மையைக் காட்டுகிறது.

ராமசேசைக் கடந்த பின்பு, சிவந்த சமுத்திரத்தை அடையும் வரையிலும் பின்வரும் இடங்களிலெல்லாம் அவர்கள் பாளயமிறங்கினார்கள்:

**1. சுக்கோத்:** (யாத். 12:37 : எண். 33:5) - இங்கு முதற்பேறனைத்தையும் கர்த்தருக்குப் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்ற கட்டளை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது (யாத். 13:2). இதன் காரணம், பஸ்காவை ஆசரித்ததன் மூலம், பாதுகாக்கப்பட்டவர்கள் முதற்பேறானவர்களே. அதுபோலவே, "அவர் [தேவன்] சித்தங்கொண்டு தம்முடைய

சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்'' (யாக். 1:18).

**2. ஏத்தாம்:** (யாத். 13:20 ; எண். 33:6) - 'ஏத்தாம்' என்பதன் பொருள், 'கோட்டை' என்பதாகும். இது ஆரம்பத்தில் கிடைக்கும் இரட்சிப்பின் சந்தோஷமாகிய அனுபவத்திற்குப் பின் நாம் நம் தேவன் பேரில் வைக்கும் விசுவாசத்தைக் குறிக்கிறது. அதன்பின், கர்த்தர் நமக்குப் பெலன், கன்மலை, கோட்டை முதலானவைகளாகிறார் (சங். 18:1,2).

கர்த்தர் பகலில் மேகஸ்தம்பத்திலும், இரவில் அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார். இது நாம் கர்த்தர்மேல் நம் நம்பிக்கையை வைக்கும்போது பகலானாலும் இரவானாலும் கர்த்தர் நம்மை எவ்விதம் வழி நடத்துகிறார் என்பதைக் காட்டுகிறது.

**3. ஈரோத்:** (யாத். 14:2 ; எண். 33:7,8) - இது மிகுதியான நாணல்களுள்ள ஒரு பள்ளத்தாக்காகும். இந்த இடத்தில் தங்களுக்கு முன்பாக சிவந்த சமுத்திரத்தையும், பின்பாக தங்களைப் பின்தொடருகிற எகிப்திய சேனையயும் இஸ்ரவேலர் கண்டனர். அவர்கள் இதை ஒரு கடுஞ்சோதனையாக உணர்ந்து நாணலைப்போல அசைந்து எகிப்தை விட்டதற்காக வருந்த ஆரம்பித்தனர் (யாத். 14:11,12). அதுபோலவே, ஒருவன் இரட்சிக்கப்பட்ட பின்பும், சரீரத்தின் அவயவங்களில் உண்டாயிருக்கிற போராடுகிற பிரமாணமாகிய தனக்குள் வாசமாயிருக்கிற பாவ சுபாவத்தின் காரணமாக, உறுதியற்றவனாய் அசைந்து உலகத்திற்குத் திரும்பிப் போக ஏதுவுண்டு (ரோமர் 7:18-23).

தேவன் அவர்களை விடுதலையாக்கும் முன்பாக அவர்கள்:

(i) தேவனை நோக்கிக் கூப்பிட வேண்டியிருந்தது (யாத். 14:10). அதுபோலவே, நம்முடைய பாவ சுபாவத்தினால் நாம் சலிப்படைந்து, 'நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?' என்று முறையிடும் இடத்திற்கு வந்து விடுகிறோம் (ரோமர் 7:24).

(ii) தங்கள் விசுவாசத்தைக் கர்த்தரில் வைத்து, மோசேக்குக் கொடுக்கப்பட்ட தேவ ஆலொசனைக்குக் கீழ்ப்படிய வேண்டியிருந்தது (யாத். 4:30,31). அதுபோலவே, கர்த்தரில் நம் நம்பிக்கையை வைத்து, அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய ஆலொசனையாகிய தண்ணீர் ஞானஸ்நானத்துக்கு நாம் கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**4. சிவந்த சமுத்திரத்தைக் கடத்தல்:** அவர்கள் சிவந்த சமுத்திரத்துக்கு அருகில் இருந்த போது, தேவன் அவர்களுக்கு இரண்டு கட்டளைகளைக் கொடுத்தார்:

(i) "நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காண மாட்டீர்கள்'' (யாத். 14:13). ஞானஸ்நானத்தில் நாம் பாவ சுபாவத்துக்கு மரித்து கிறிஸ்துவின் மரணத்திற்குள் அவருடனேகூட அடக்கம் பண்ணப்படுகிறோம் (ரோமர் 6:2-4). அதன்பின்னர் நம்மைப் பாவத்துக்கு மரித்தவர்களாக நாம் தொடர்ந்து எண்ணிக் கொண்டிருக்கிறோம் (ரோமர் 6:11). அப்போது நம்முடைய பாவ சுபாவம் மாம்சத்திலே ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுகிறது (ரோமர் 8:3).

(ii) 'புறப்பட்டுப் போங்கள்' (யாத். 14:15). இஸ்ரவேல் ஜனங்கள் புறப்பட்டுப் போக வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டபோது அவர்கள் கீழ்ப்படிந்தார்கள். நாமுங்கூட புறப்பட்டுப் போக வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதன் மூலம் தேவனுடைய இவ்வாலோசனைக்கு நாம் கீழ்ப்படியும்போது,

மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவரான கிறிஸ்துவின் சித்தத்திற்கு பங்குள்ளவர்களாகிறோம். இப்படியாக, நாம் நீதியை நடப்பிக்கும்படி தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகிறோம் (ரோமர் 6:11-13).

சிவந்த சமுத்திரத்தைக் கடந்ததும், "அவர் [கர்த்தர்] மகிமையாய் வெற்றி சிறந்தார்; குதிரையையும், குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார்" என்று அவர்கள் ஜெயத்தின் கீதம் பாடினார்கள் (யாத். 15:1). அதுபோலவே, ஞானஸ்நானத்தில் பழைய மனுஷன் தன் பாவ சரீரத்துடன் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக அடக்கம் பண்ணப்படுகிறான்; நாம் ஜெயங்கொள்ளும் ஜீவியம் செய்ய ஆரம்பிக்கிறோம் (ரோமர் 6:4-7,9).

## போதனை:

நாம் தொடக்கத்தில் கிடைக்கிறதான இரட்சிப்பின் சந்தோஷத்தில் மட்டும் திருப்தியடையாமல், தண்ணீர் ஞானஸ்நானத்தில் தேவ ஆலொசனைக்குக் கீழ்ப்படிய ஆயத்தமுள்ளவர்களாயிருந்து, ஜெயங்கொள்ளும் ஜீவியம் செய்ய வாஞ்சிக்க வேண்டும்.

**மனப்பாடம்:** ரோமர் 6:11-13

### பாடம் 3

# இஸ்ரவேலரின் பிரயாணம்

(பகுதி III)

### சூர் முதல் ஆலூஸ் வரை

1. **சூர் வனாந்தரம்:** (யாத். 15:22) - இது ஏத்தாம் வனாந்தரத்தின் ஒரு பகுதியாகும் (எண். 33:8). தண்ணீர் இல்லாத இவ்வனாந்தரத்தில் அவர்கள் மூன்று நாட்கள் பிரயாணம் செய்தனர். இந்த உலகம் இருண்டதும் பாழுமான வனாந்தரமாக நமக்குக் காணப்படுவதால் உண்டாகும் வேறுபாட்டின் ஜீவியத்தை இது காட்டுகிறது. ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு இவ்வுலகமானது, பணம், ஐசுவரியம், வீடுகள், சுகபோகம், ஸ்தானம், அதிகாரம், கீர்த்தி, களியாட்டு, நாகரீகம் போன்ற கவர்ச்சிகளையும், வசீகரிக்கக் கூடியவற்றையும் அளிக்கிறது. ஆனால் ஆவிக்குரிய மனிதனுக்கோ, உலகத்திற்குரிய இந்தக் காரியங்களெல்லாம் மாயையாகவும், வறண்டதும் விடாய்த்ததுமான வனாந்தரமாகவும் காணப்படுகிறது.

2. **மாரா:** (யாத். 15:23-26 : எண். 33:8) - இங்கு அவர்களுக்குத் தண்ணீர் கிடைத்தது. ஆனால் அந்தத் தண்ணீர் கசப்பாயிருந்தது. மோசேக்கு ஒரு குறிப்பிட்ட மரம் காண்பிக்கப்பட்டது. அவன் அதை அந்தத் தண்ணீரில் போட்டபோது அத்தண்ணீர் மதுரமாயிற்று. தேவன் அவர்களுக்கு ஒரு நியமத்தையும் நியாயத்தையும் கட்டளையிட்டு, அங்கே அவர்களைச் சோதித்து, "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவி கொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்" (யாத். 15:26).

ஆகையால், தெய்வீக சுகம் என்பது, தேவனுடைய வசனத்தின்படி ஒழுங்குக்குக் கொண்டுவரப்பட்ட ஜீவியத்தில் மட்டுமே அனுபவிக்கக் கூடியதாகும். இந்த ஒழுங்கு ஒருவேளை கசப்பாகத் தோன்றலாம். ஆனால் வெட்டப்பட்டுத் தண்ணீரில் போடப்பட்ட

அந்த மரத்தைப் போல, தாம் பட்ட பாடுகளினால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, இப்போது நமக்கு ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையைத் தந்து, நம்முடைய 'மாராக்களை' நமக்கு மதுரமாக்குகிறவராயிருக்கிற இயேசு நமக்கு இருக்கிறார்.

**3. ஏலீம்:** (யாத். 15:27 ; எண். 33:9). - இது பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்ச மரங்களும் இருந்த ஒரு பாலை வனச்சோலையாகும். இது, அப்போஸ்தல உபதேசங்களில் உறுதியாய்த் தரித்திருக்கிற, தேவஊழியரும் விசுவாசிகளும் சேர்ந்த பரிசுத்தவான்களின் ஐக்கியத்தைக் காண்பிக்கிறது.

**4. சீன் வனாந்தரம்:** (யாத். 16:1 ; எண். 33:11) - இங்கு தேவன் அவர்களைச் சிறுமைப்படுத்தி, பசியினால் வருத்தி, மன்னாவினால் அவர்களைப் போஷித்து, அதினால் அவர்கள் அவருடைய நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ, இல்லையோ என்று அவர்களைச் சோதித்தார் (உபா. 8:2, 3 ; யாத். 16:4). இயேசு தம்மைக் குறித்து, 'வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பம்' (மன்னா); 'ஜீவ அப்பம் நானே'; 'என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்' (யோவான் 6:32, 35) என்று கூறினார். இயேசுவிடத்தில் நித்திய ஜீவ வசனங்கள் உண்டு. நாம் தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**5. தொப்கா:** (எண். 33:12) - தொப்கா என்றால் 'தட்டுதல்' என்று பொருள். இது, கதவைத் திறக்கும் வரையிலும் விடாமல் ஒருவர் தொடர்ந்து தட்டிக்கொண்டே இருப்பதுபோல, சாதாரணமாகக் கேட்பதோடு நிறுத்தி விடாமல், பதில் கிடைக்கும்வரை சோர்ந்துபோகாமல் தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருக்கும் ஜெப ஜீவியத்தைக் காண்பிக்கிறது.

**6. ஆலூஸ்:** (எண். 33:13) - ஆலூஸ் என்றால் 'தண்ணீர் அருகில்' என்பது பொருள். இது மனுஷனுடைய இருதயத்திலுள்ள 'ஆழமான தண்ணீரைப் போல்' இருக்கும் யோசனையைக் குறிக்கிறது (நீதி. 20:5). நம் ஜீவியத்தில் தேவனுடைய வசனத்தைக் தியானிப்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது.

நாம் தேவனுடைய வசனத்திலிருந்து புதிய வெளிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஜெப ஜீவியம், தியான ஜீவியம் ஆகியவற்றை விருத்தி செய்யவேண்டும். இவைகளை அலட்சியமாக விட்டுவிடுவது, சோதனை நேரங்களில் இஸ்ரவேல் ஜனங்களைப்போல நாமும் முறுமுறுப்பதற்கு நம்மை வழி நடத்தும்.

**போதனை:**

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் வனாந்தரப் பிரயாணத்தில் மன்னா என அழைக்கப்பட்ட வானத்தின் அப்பத்தினாலே அனுதினமும் போஷிக்கப்பட்டார்கள். அதுபோல, நாமும் அனுதின ஜீவியத்தில் ஒவ்வொரு நாளும் ஜீவிப்பதற்குத் தேவையான புதிய வெளிப்படுத்தல்களை தேவனுடைய வசனத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**மனப்பாடம்:** யாத்திராகமம் 15:26 ; II பேதுரு 1:4

### பாடம் 4

## இஸ்ரவேலரின் பிரயாணம்

(பகுதி IV)

### ரெவிதீம் முதல் சீனாய் வரை

1. **ரெவிதீம்:** (யாத். 17:1 ; எண். 33:14). - இந்த இடத்தில் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தபோது இஸ்ரவேல் புத்திரர் வாதாடினதின் நிமித்தமும், கர்த்தரைப் பரீட்சை பார்த்ததின் நிமித்தமும், இந்த இடத்திற்கு மாசா என்றும், மேரிபா என்றும் பேரிடப்பட்டது. மோசே தன் கோலினால் கன்மலையை அடிக்க வேண்டியிருந்தது. கன்மலையிலிருந்து தண்ணீர் பாய்ந்தது. தேவனுடைய வல்லமை வெளிப்படுத்தப்பட்டது.

**'கன்மலை'** என்பது நமக்காக அடிக்கப்பட்ட கிறிஸ்துவைக் குறிக்கிறது (ஐ கொரி. 10:4). **'கோல்'** தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. எகிப்தியர்மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பைச் செலுத்துவதற்காக நதியை அடிப்பதற்கு உபயோகப்படுத்தியதும் இந்தக் கோலே ஆகும். அப்போது நதியின் தண்ணீர் இரத்தமாய் மாறியது (யாத். 7:20). **கன்மலையைக் கோலினால் அடிப்பது** என்பது, நாம் ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி, கிறிஸ்து நம்மேல் வரவிருந்த நியாயத்தீர்ப்பைத் தம்மேல் ஏற்றுக்கொண்டதைக் குறிக்கிறது.

இந்தச் சம்பவங்களுக்குப் பின் உடன்தானே அமலேக்கியர் இஸ்ரவேலரைத் தாக்கி, பின்வருகிற பாளயத்திலுள்ள இளைத்து விடாய்த்தவர்களையும், பலவீனரையும் வெட்டிப்போட்டார்கள் (உபா. 25:17, 18). அமலேக்கியரைக் குறித்துத் தலைமுறை தலைமுறைதோறும் அவர்களுக்கு விரோதமாகக் கர்த்தருடைய யுத்தம் நடக்கும் என்று கர்த்தர் கூறினார் (யாத். 17:16). ஆகையால், இந்தத் தலைமுறையிலும் நாம் இளைத்து விடாய்த்திருக்கும்போது அமலேக்கியரின் ஆவி நம்மைத் தாக்குகிறது. நாம் நமக்கு வருகிறதான சோதனைகளில் இஸ்ரவேல் ஜனங்களைப் போல முறுமுறுப்போமாயின், நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் பெலவீனப்பட்டுப் பின்தங்கினவர்களாகக் காணப்படுவோம்.

அமலேக்கை மேற்கொள்வதற்கு மூன்று காரியங்கள் செய்யப்பட வேண்டியதாயிருந்தது:

(i) மோசே தன் கைகளை ஏறெடுத்தவனாக மலையுச்சியில் காணப்பட வேண்டியதாயிருந்தது (யாத். 17:9-11): சபையின் அக்கிரமத்தைச் சுமந்துகொண்டு தேவசமுகத்தில் தங்கியிருக்கிற நடத்திப்புக்காரர் சபையில் காணப்பட வேண்டும்.

(ii) ஆரோனும் ஊரும் மோசேயின் கைகளைத் தாங்க வேண்டியதாயிருந்தது (யாத். 17:12): நடத்திப்புக்காரரின் பட்சத்தில் நின்று, அவர்களை ஜெபத்தில் தாங்கக் கூடிய ஒரு கூட்டம் பரிசுத்தவான்கள் சபையில் காணப்பட வேண்டும்.

(iii) யோசுவா பட்டயத்தினால் சத்துருக்களோடு யுத்தம் பண்ணவேண்டியதாயிருந்தது (யாத். 17:13): நடத்திப்புக்காரரோடு சேர்ந்து நின்று, பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட சத்தியத்துக்காகப் போராடக்கூடியவர்கள் சபையில் இருக்க வேண்டும்.

அப்போது மட்டுமே கர்த்தர் யேகோவாநிசியாக (ஜெயக்கொடி) நம்மோடு இருப்பார் (யாத். 17:15).

2. **சீனாய் வனாந்தரம்:** (யாத். 19:1,2; எண். 33:15) - இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்துக்கு வந்து, அங்கே மலைக்கு எதிராகப் பாளயமிறங்கினார்கள். அவர்கள் தங்களைச் சுத்திகரித்துக் கொண்டு, மூன்றாம் நாளுக்கென்று ஆயத்தமாயிருக்க வேண்டியிருந்தது. மூன்றாம் நாளில் கர்த்தர் சீனாய் மலையில் அக்கினியில் வந்திறங்கி, அவர்களோடு நேரடியாக சம்பாஷித்தார் (யாத். 19:10,11,18-20). புதிய ஏற்பாட்டில் இது, பரிசுத்த ஆவியினாலும், அக்கினியாலும் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு நிழலாயிருக்கிறது (மத். 3:11).

தேவன் மோசேயை மலையுச்சிக்கு அழைத்து, அங்கு கீழ்கண்டவற்றை அவனுக்குக் கொடுத்தார்:

(i) பத்து கற்பனைகள்
(ii) ஆசரிப்புக் கூடாரத்தை உண்டுபண்ண வேண்டிய மாதிரி
(iii) ஆசாரியத்துவத்தைப் பற்றிய விவரங்கள்

புதிய ஏற்பாட்டடில்:

(i) இயேசு இந்தப் பத்துக் கற்பனைகளையும், தேவன்பால் வைக்கும் அன்பு, பிறன்பாலுள்ள அன்பு என்ற இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார் (மத். 22:35-40). இந்த அன்பு நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது (ரோமர் 5:5).

(ii) நாம் பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தினால் தேவனுடைய வாசஸ்தலம் (அல்லது ஆலயம்) ஆகிறோம் (I கொரி. 3:16; II கொரி. 6:16).

(iii) நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக பரிசுத்த ஆசாரியக் கூட்டமாக்கப்படுகிறோம் (I பேதுரு 2:5; வெளி. 1:6).

**போதனை:**

> நாம் பரீட்சைகளின் மத்தியில் முறுமுறுக்காது, பலவிதமான சோதனைகளைச் சந்திக்கும்போது அவைகள் யாவையும் மிகுந்த சந்தோஷமாக எண்ண வேண்டும். நாம் பின்தங்கிக் காணப்படுவோமானால், பிசாசு நம் ஆவிக்குரிய ஜீவியத்தை அழித்துப் போடுவான். எனவே பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றவர்களாய் நாம் முன்னேறிச் செல்ல வேண்டும்.

**மனப்பாடம்:** யாக்கோபு 1:2, 3:II கொரிந்தியர் 6:16

## பாடம் 5

# இஸ்ரவேலின் பிரயாணம்

## (பகுதி V)

### கிப்ரோத் அத்தாவா முதல் பாலபன் வரை

சீனாய் வனாந்தரத்திலிருந்து, இஸ்ரவேல் ஜனங்கள் மேலும் 39 வருடங்கள் பிரயாணம்பண்ணி, கானானை அடைவாற்கு முன் பல இடங்னளில் பாளயமிறங்கினார்கள்.

1. **கிப்ரோத் அத்தாவா:** (எண். 33:16;11) - இங்கு ஜனங்கள் முறையிட்டார்கள். எனவே கர்த்தருடைய கோபம் மூண்டது, கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிந்து, பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரைப் பட்சித்தது. எனவே அந்த ஸ்தலம் 'எரிதல்' என்று பொருள்படும் 'தபேரா' என்று அழைக்கப்படுகின்றது (எண். 11:1-3). முறுமுறுத்தலும் முறையிடுதலும் கர்த்தருக்கு அருவருப்பானவையாகும். நாம் கர்த்தரை நம்பி, அவரை எக்காலத்திலும் ஸ்தோத்தரிக்க வேண்டும்.

அவர்கள் இறைச்சியையும் இச்சித்தார்கள் (எண். 11:4-6). அவர்களுக்குத் தேவன் கொடுத்ததுவந்த மன்னாவை அவர்கள் அற்பமாக நினைத்து, எகிப்திலே அவர்களுக்குக் கிடைத்து வந்த ஆகாரத்தின்மேல் ஆவல் கொண்டு அதை இச்சித்தனர். நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாகக் காணப்படாவிட்டால், நாமும் பலவிதமான இச்சைகளில் விழுந்து விடுவோம் (ரோமர் 1:21,24,26). தேவனை நன்றியுள்ள இருதயத்தோடு ஸ்தோதிரிப்பது, அதிருப்தி, முறுமுறுப்பு

போன்றவற்றிற்கு இரையாகதவாறும், பலவிதமான இச்சைகளினால் இழுப்புண்டு போகாதவாறும் நம்மைத் தடுத்துப்பாதுகாக்கிறது. காடைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஆனால் அவர்கள் அந்த இறைச்சியைப் புசித்துக் கொண்டிருந்தபோதே, பெரிய வாதையினால் அழிக்கப்பட்டார்கள். எனவே அந்த ஸ்தலம், 'இச்சையின் கல்லறைகள்' என்று பொருள்படும், 'கிப்ரோத் அத்தாவா' என்று அழைக்கப்பட்டது. நாம் தேவசித்தத்திற்கு விரோதமாய் எதையாகிலும் பிடிவாதமாய் வாஞ்சிப்போமானால், கர்த்தர் ஒருவேளை நமக்கு அதைத் தருவார், ஆனால், அது நம்மமுடைய ஆத்துமாக்களில் இளைப்பைக் ஒண்டுவரும் (சங் 1-6:14,15).

2. **ஆஸரோத்:** (எண். 33:17;11:35;1-15) - இங்கு மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாய்ப் பேசினார்கள். தேவனுக்குக் கோபமுண்டாகி மிரியாமை குஷ்டரோகத்தால் வாதித்தார். மோசே அவளுக்காகப் பரிந்து பேசினான். இருப்பினும், அவள் ஏழு நாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருக்க வேண்டியதாயிருந்தது. நம்மை நடத்தும்படி தேவனால் நியமிக்கப்பட்ட நடத்திப்புக்காரரைக் குற்றப்படுத்துவது தேவனுடைய பார்வையில் கடுமையான குற்றமாகும்.

3. **பாரான் வனாந்தரம்:** (எண். 12:16) - இங்கிருந்து கானான் தேசத்தை வேவு பார்க்கும்படியாக பன்னிரண்டு வேவுகாரர் அனுப்பப்பட்டனர். அவர்கள் கானானின் கனிகளில் சிலவற்றைக் கொண்டு வந்தார்கள் (எண். 13:23). அவர்களில் பத்துப் பேர் தேசத்தைக் குறித்து துர்ச்செய்தி கொண்டு வந்தார்கள் (எண். 13:28,29,31-33.). எனவே சபையாரெல்லாரும் இராமுழுவதும் கூக்குரலிட்டுப் புலம்பி அழுது, மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். அதுபோலவே, தேவன் நமக்கு ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிற சுதந்தரத்திற்குச் சமீபத்தில் வந்த பின்பும், 'இனிவரும் உலகத்தின் பெலன்களை ருசிபார்த்த பின்பும், நம்மை அதைரியப்படுத்தி, நம்மைப் பின்னிட்டுப் பார்க்கச் செய்யக்கூடிய சில சந்தர்ப்பங்கள் எழும்பக் கூடும்.

யோசுவாவும் காலேபும், 'கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை' என்று கூறி, ஜனங்களைத் தைரியப்படுத்த முயற்சித்தார்கள். ஆனால் சபையாரெல்லாரும் அவர்களைக் கல்லெறிவதாக பயமுறுத்தினார்கள். அப்போது தேவனுடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாகக் காணப்பட்டது (எண். 14:6-10). நாம் கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்தது, புதிய தீர்மானங்களையும் பிரதிஷ்டைகளையும் செய்யும்போது, நமக்கு எதிர்ப்புகள் உண்டாகலாம்; நமக்கு விரோதமாகக் கடினமான வார்த்தைகள் பேசப்படலாம்; ஆனால் தேவன் வந்து நமக்கு உதவி செய்வார் (உதாரணம்; சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ).

மோசே ஜனங்களுக்காகப் பரிந்து பேசியபோது தேவன் அவர்களுடைய அக்கிரமத்தை மன்னித்தார் (எண். 14:19,20). தேவனுடைய சமுகத்தில் நின்று, அக்கிரமத்தைச் சுமந்து, நமக்காகப் பரிந்து பேசுகிற நடத்திப்புக்காரர் நிமித்தமாகவே நாமும், தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்புவிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் துர்ச்செய்தி கொண்டு வந்தவர்களோ கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்தார்கள் (எண். 14:36,37). நாம் மற்றவர்களை அதைரியப்படுத்தக் கூடிய வார்த்தைகளைப் பேசாதபடி கவனமாயிருக்க வேண்டும்.

பின்னர் கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்கள், சபைக்குத் தலைவர்களும் பிரபலமானவர்களுமாகிய இருநூற்றைம்பது பேரைச் சேர்த்துக்கொண்டு, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக எழும்பினார்கள். அது அவர்களுடைய சொந்த அழிவுக்கு வழிவகுத்தது (எண். அதி. 16). ஆரோனுடைய துளிர்த்த கோலின் மூலமாக, தேவன், லேவி கோத்திரத்தின் ஊழியத்தையும் ஆரோனுடைய ஊழியத்தையும் உறுதிப்படுத்தினார். அந்தக் கோல் கலகக்காரருக்கு விரோதமான அடையாளமாக உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்டது (எண். அதி 17).

இதிலிருந்து தேவனுடைய ஊழியக்காரரும் நடத்திப்புக்காரரும் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் என்றும், ஒருவரும் .இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுவதில்லை என்றும், அதினிமித்தம் நாம் எப்பொழுதும் அவர்களுக்குக் கீழ்படிந்து அடங்க வேண்டும் என்றும் விளங்கிக்கொள்கிறோம் (எபி. 5:4; 13:17).

இந்த சம்பவத்திற்கு ஆவிக்குரிய மற்றொரு கருத்தும் உண்டு. இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்தையும் குறிக்கும்படி ஒவ்வொரு கோலாக, எல்லாக் கோல்களும் தேவ சமூகத்தில் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் லேவி கோத்திரத்தைச் சேர்ந்த ஆரோனின். கோல் மட்டும் துளிர்த்து, மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டது. அதுபோலவே பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற தேவ ஜனங்கள் எல்லாருடைய மத்தியிலும், தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு கூட்டத்தார் மட்டுமே கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, திரைக்குள் பிரவேசிப்பார்கள்.

**4. காதேஸ்:** (எண். 20:1) - மிரியாம் இங்கு மரித்தாள். மோசேயிடம் கன்மலையைப் பார்த்துப் பேசும்படி கூறப்பட்டபோது அவன் கன்மலையை அடித்ததும், கர்த்தரை விசுவாசிக்கத் தவறி, அவரை ஜனங்களுக்கு முன்பாகப் பரிசுத்தப்படுத்தாமற் போனதும் இந்த இடத்திலேயே ஆகும் (எண். 20:2,6-12). இந்தக் கீழ்படியாமை அவனுக்கு அதிக நஷ்டத்தை உண்டாக்கியது; அவனால் கானானுக்குள் பிரவேசிக்கக் கூடாமற் போயிற்று.

**போதனை:**

நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் இஸ்ரவேல் ஜனங்களைப் போலவே நாம் பலவிதமான அனுபவங்களின் வழியாகக் கடந்து செல்லவேண்டியிருக்கிறது. நாம் எல்லாக் காரியங்களையும் வழக்கம் போலவே செய்துகொண்டு போகாமல், ஒவ்வொரு முறையும் தேவனுடைய பூரணமான சித்தம் இன்னதென்று அறிந்து நிச்சயித்துக் கொள்ளும்படி நம் மனம் புதிதாகிக் கொண்டே இருக்க எப்போதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

**மனப்பாடம்:** I கொரிந்தியர் 10:11,12

பாடம் 6

## இஸ்ரவேலரின் பிரயாணம்

### (பகுதி VI)

#### ஓர் என்னும் மலை முதல் மோவாப் வரை

**1. ஓர் என்னும் மலை:** (எண். 20:22) - ஆரோன் இங்கு மரித்தான். அவன் மரிக்கும் முன்பே அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு அவனுடைய வஸ்திரங்கள் உடுத்துவிக்கப்பட்டன. ஜனங்கள் ஆரோனுக்காக முப்பது நாட்கள் துக்கங்கொண்டாடினார்கள் (வச. 27-19).

ஓர் என்னும் மலை ஜெப ஜீவியத்தைக் குறிக்கிறது. ஏனெனில் மோசே இம்மலையில் தேவசமுகத்தில் தரித்திருந்தான். அவர்கள் ஓர் என்னும் மலையிலிருந்து பிரயாணப்பட்டனர்; ஏதோமின் இராஜா தன் தேசத்தின் வழியாக ஜனங்கள் கடந்து செல்ல அனுமதி தராததால், தேசத்தைச் சுற்றிச் செல்ல வேண்டியிருந்தது. வழி கடினமாயிருந்ததினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்தார்கள்; ஆகாரத்தினிமித்தம் முறுமுறுத்தார்கள். தேவன் அவர்கள் மத்தியில் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அனுப்பினார். அவைகள் அநேகரைக் கடித்ததினால் அவர்கள் மாண்டுபோனார்கள். ஜனங்கள் மனஸ்தாபப்பட்டதினிமித்தம் மோசே அவர்களுக்காக விண்ணப்பம் பண்ணினான். கர்த்தருடைய ஆலோசனையின்படியே ஜனங்கள் நோக்கிப் பார்த்து சுகம் பெறும்படியாக மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உயர்த்தினான் (எண். 21:4-9). அதுபோலவே, சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசுவை நோக்கிப் பார்த்து, அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைந்து கொள்வார்கள் (யோவான் 3:14,15).

**2. மோவாபின் சமனான வெளி:** (எண். 22:1) - இஸ்ரவேலர் பாசானின் இராஜாவாகிய ஓகையும், எமோரியரின் இராஜாவாகிய சீகோனையும் ஜெயித்து அவர்கள் தேசங்களை சுதந்தரித்துக் கொண்டார்கள் (எண். 21:33,34). இதன் பின்பு அவர்கள் பிரயாணம்பண்ணி, மோவாபின் சமனான வெளிக்கு வந்தார்கள்.

அவர்கள் தங்கள் வேறுபிரிந்த ஜீவியத்தைப் பாதுகாத்து ஜாதிகளோடே கலவாமல் தனித்து வாசம்பண்ணும் ஜனமாகக் காணப்பட்ட வரை தேவன் அவர்களோடிருந்தார் (எண். 23:9.).

(i) அவர்கள் அக்கிரமும் குற்றமும் இல்லாத ஜனமாகக் காணப்பட்டார்கள் (வச. 21).

(ii) அவர்களுக்குள்ளே இராஜாவின் ஜெய கெம்பீரம் இருந்தது (வச. 21).

(iii)அவர்களுக்கு காண்டாமிருகத்துக்கொத்த பெலன் இருந்தது (வச. 22).

(iv) அவர்களுக்கு விரோதமாக எந்த விதமான மந்திர வாதமும், குறிசொல்லுதலும் இருக்க முடியவில்லை (வச. 23).

இவ்விதமாக அவர்கள் தேவனுடைய அழகான வாசஸ்தலங்களாக் காணப்பட்டார்கள் (எண். 24:5,6). பிலேயாம், இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கும்படியாக மோவாபின் இராஜாவாகிய பாலாக்கினால், கூலி பேசி அழைத்துக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அவனால் அவ்விதம் செய்யக்கூடாமற் போயிற்று.

அப்போது பிலேயாம் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும், வேசித்ததனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகப் போடும்படியாக பாலாக்கிற்குக் கற்றுக் கொடுத்தான் (எண். 25:1,2; வெளி. 2:14). அதைக் குறித்து அவர்கள் ஜாக்கிரதையாயிராததினால் தேவனுடைய சாபத்தைத் தங்களுக்குத் தாங்களே வருவித்துக் கொண்டார்கள்.

நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம். தேவன் நம்முடைய தேவனாகவும், நாம் அவருடைய ஜனங்களாகவும் காணப்படும்படியாக, நாம் வேறுபிரிந்து, அசுத்தமானதைத் தொடாமல் இருக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறோம் (II கொரி. 6:16,17).

மோசே அபாரீம் மலையிலிருந்த நேபோ பர்வதம் மட்டுபம் போனான். இருப்பினும், இதற்கப்புறம் போய், கானானுக்குள் பிரவேசிப்பதற்கு அவனுக்கு அனுமதி அளிக்கப்படாமல், தேசத்தை பார்க்கும்படியாக மட்டுமே அவன் அனுமதிக்கப்பட்டான் (உபா. 32:49,50,52). அவன் மேரிபாவின் தண்ணீர்களண்டையில் கர்த்தருக்கு விரோதமாகக் குற்றஞ் செய்ததே அதன் காரணமாகும்.

தேவனுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசத்தை நாம் பரிபூரணமாய் பெற்றுக்கொள்ளும்படியாக, நம்முடைய அழைப்பையும் தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்தக்கொள்ள வேண்டும் (II பேதுரு 1:10, 11).

**போதனை:**

விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் வாக்குத்தத்தங்களைச் சுதந்தர்த்துக் கொள்பவர்களை நாம் பின்பற்றுகிறவர்களாயிருந்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட்டு, முடிவு பரியந்தமும் ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டும்.

**மனப்பாடம்:** எபிரெயர் 6:11,12

### பாடம் 7

## இஸ்ரவேலின் பிரயாணம்

### (பகுதி VII)

### யோர்தானைக் கடந்தது

இஸ்ரவேலர் பல இடங்களிலும் பாளயமிறங்கியது, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்மை ஆழமான பரிசுத்ததமாக்குதலின் ஜீவியத்திற்கு வழி நடத்தக்கூடிய ஆவிக்குரிய அனுபவங்களையும் மற்றும் சோதனைகளையும் பரீட்சைகளையும் காண்பிக்கிறது. கடைசியாக, அவர்களுடைய பிரயாணத்தின் இறுதியில் கானானுக்குள் பிரவேசிப்பதற்கு முன்பு, அவர்கள் யோர்தான் நதியைக் கடக்க வேண்டியிருந்தது.

செங்கடலைக் கடப்பது என்பது, நாம் பாவ சுபாவத்துக்கு மரிக்கும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் தண்ணீர் ஞானஸ்நானத்துக்கு நிழலாட்டமாயிருக்கிறது. அதன் பின்பு, நம்முடைய ஜீவிய நாட்களெல்லாம், நாம் நம்மைப் பாவத்துக்கு மரித்தவர்களாய் எண்ணிக் கொள்ள வேண்டும். ஆனால் யோர்தானைக் கடப்பது, அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, கிறிஸ்துவின் பாடுகளின் ஐக்கியத்தை அறிவதைக் குறிக்கிறது (பிலி. 3:10).

செங்கடலை இரண்டாகப் பிரித்து, யோர்தானைப் பிரித்ததினின்று வித்தியாசமானது. செங்கடலின் தண்ணீர் வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் அவர்களுக்கு மதிலாக நின்றது (யாத். 14:22). ஆனால், யோர்தானைக் கடக்கும்போது ஆசாரியர்கள் தண்ணீரில் கால் வைத்தவுடனே, மேலேயிருந்து வருகிற தண்ணீர் ஒரு குவியலாகக் குவிந்தது; மறுபக்கத்தில் உப்புக்கடலுக்கு ஓடிவருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று (யோசுவா 3:15,16). உடன்படிக்கைப்பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர், தங்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட சத்தியத்துக்காகப் போராடுகிற பிரதிஷ்டையுள்ள ஊழியரைக் குறிக்கிறார்கள். நம்முடைய ஜீவியத்ததின் இறுதியில் வரக்கூடிய சோதனைகள் குவியலாக நின்ற தண்ணீரைப்போல கடினமானவையாயும், பெரிதானவையாயும் காணப்படும். கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்குள்ளதாயிருக்கும்படி அழைக்கப்பட்ட சபை, அப்படிப்பட்ட உபத்திரவங்கள், அக்கினி போன்ற சோதனைகள் ஆகியவற்றினூடாகப் போகும்போது அது அழிந்து போனாதபடி சத்தியத்தை தாங்கி நிற்கிற பிரதிஷடை பண்ணப்பட்ட தேவ ஊழியம் தேவையாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து தீர்ந்த பின்பு, யோர்தானில் ஆசாரியரின் கால்கள் உறுதியாய் நின்ற இடத்திலிருந்து பண்ணிரண்டு கற்களை எடுத்து, அதை அக்கரைக்குக் கொண்டு போய், கில்காலிலே நாட்டும்படிக்கு யோசுவா கட்டளையிட்டான் (யோசுவா 4:20). இந்தக் கற்கள், நம் ஜீவனையும் அருமையாக எண்ணாமல், நாம் சோதனைகளைச் சகித்து, ஜெயவீரராக விளங்குவதைக் குறிக்கிறது.

இந்தக் கற்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கர்த்தர் யோர்தானின் தண்ணீர்களண்டையில் செய்ததற்கு நினைப் பூட்டுதலாயிருந்ததுபோல, எல்லாவற்றையும் ஜெயித்து நம்முடைய சுதந்தரத்தை அடைந்து கொள்ளும்படியாகக் கடந்து போகும் நாம், சோதனைகளின் மத்தியில் எவ்விதம் விசுவாசத்தைக் கொண்டு தேவ பெலத்தினாலே காக்கப்பட்டு வருகிறோம் என்பதை நினைவு கூர வேண்டும் (I பேதுரு 1:5).

யோர்தானின் நடுவிலும் ஆசாரியர்கள் நின்ற இடத்தில் யோசுவா மற்றொரு பன்னிரண்டு கற்களை நாட்டினான். (யோசுவா 4:9). ஆசாரியர்கள் யோர்தானிலிருந்து கரையேறினவுடைனேயே, யோர்தானின் தண்ணீர்கள் தங்களிடத்துக்குத் திரும்பி அந்தக் கற்களின் மீதும் புரண்டு போக ஆரம்பித்தது. அந்தக் கற்கள அங்கு இந்நாள் வரைக்கும் இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்தக் கற்கள், நமக்கு வரக்கூடிய சோதனைகள், உபத்திரவங்னளை நாம் பொருட்படுத்தாது, அப்போஸ்தல பிரதிஷ்டையுள்ள ஊழியக்காரரின் உதவியினால் சத்தியத்திற்காக உறுதியாக நிற்கும்படி பண்ணுகிற தீர்மானத்தைக் குறிக்கின்றன.

**போதனை:**

நாம் எப்போதும், சத்தியத்திற்காகப் போராடுகிற தேவ ஊழியரோடு சேர்ந்து நின்று, நம்முடைய பாதையில் வரும் எவ்வித சோதனைகளுக்கும் தைரியமாக முகங்காட்ட ஆயத்தமாயிருந்து, அவற்றை ஜெயிக்க வேண்டும்.

**மனப்பாடம்:** எரேமியா 12:5

பாடம் 8

## பரி. பவுலின் மூன்றாம் சுவிசேஷப் பிரயாணம்

**அப்: 18:22 - 21:17**

**பொருளடக்கம்:**

1. **அந்தியோகியா** - இங்கு சிலகாலம் சஞ்சரித்தபின்பு மூன்றாம் பிரயாணத்தை பரி. பவுல் கி.பி. 54 - இல் ஆரம்பித்தார். அவர் தன்னுடன் தீமோத்தேயுவையும் தீத்துவையும் கூட்டிக் கொண்டுபோனார் (அப். 18:22, 23).

2. **கலாத்தியா, பிரிகியா** - அவர் இந்த நாடுகளில் சுற்றித் திரிந்து சீஷர்களைத் திடப்படுத்தினார். அங்கு நடந்த சம்பவங்களின் விவரம் தெரியாவிட்டாலும், I கொரிந்தியர் 16:1 - 3 - லிருந்து அவர் ஒவ்வொரு வாரமும் ஏழை விசுவாசிகளுக்கென்று தர்மப்பணம் சேர்க்கத் திட்டம் செய்தாரென்று நாம் அறிகிறோம். அங்கிருந்து அவர் எபேசு பட்டணத்திற்கு வந்தார் (அப். 18:23 ; 19:1).

3. **எபேசு** - இங்கு அப்பொல்லோ மூலம் மனந்திரும் புதலுக்கென்று கொடுக்கப்பட்ட யோவானுடைய ஞானஸ் நானத்தைப் பெற்றிருந்த சில சீஷருக்கு அவாகள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். பவுல் மூன்று மாதம் யூத ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பிரசங்கித்து, பின்பு இரண்டு வருஷம் திறன்னு என்பவனின் வித்யாசாலையிலும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார் (அப். 19:1-10). அநேக விசேஷித்த அற்புதங்கள் நடந்தன. பவுலின் சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொன்டுவந்து. வியாதிக்காரது மேல் போட, வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப் போயின (அப். 19:11-20). கடைசியாக, தியானாள் என்ற அங்குள்ள தேவதையின் கோவிலைப் போல, வெள்ளியினால் சிறு கோவில்களைச் செய்து வந்த தெமேர்திரியு என்ற தட்டான் அவர்களுக்கு விரோதமாய் எழும்பிக் கலகம் உண்டாக்கினான். பட்டணத்துச் சம்பிரதி குறுக்கிட்டு, சமாதானத்தை உண்டு பண்ணினான் (அப். 19:23-41). பின்பு பவுல் மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டார் (அப். 20:1).

4. **மக்கெதோனியா** - பவுல், அத்திசைகளிலே சீஷர்களுக்கு வெகுவாய்ப் புத்திசொல்லி, பின்பு கிரேக்கு தேசத்திற்கு வந்தார் (அப். 20:2).

5. **கிரேக்கு தேசம்** - பவுல், இங்கே மூன்று மாதம் ஊழியஞ் செய்தார்.

பின்பு சீரியா தேசத்தின் வழியாய்ப் போக மனதாயிருந்தபோது, யூதர்களின் தீமையான யோசனையை அறிந்து, அவர், தரை மார்க்கமாய் மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டு பிலிப்பி பட்டணத்திற்கு வந்தார் (அப். 20:2,3,6). இங்கிருந்து சோபத்தரும் அரிஸ்தர்க்கும் செக்குந்தும் காயுவும் தீமோத்தேயுவும் தீகிக்கும் துரொப்பீமும் வழித்துணையாய் ஆசியா நாடு வரைக்கும் வந்து, பின்பு இவர்கள் முன்னாகப் போய், துரொவா பட்டணத்தில் அவருக்காகக் காத்திருந்தனர் (அப். 20:4,5).

6. **பிலிப்பி** - பவுலும் லூக்காவும் இங்கு தங்கி புளிப்பில்லா அப்பப் பண்கையை ஆசரித்தனர்; பின்பு கப்பல் ஏறி ஐந்து நாட்களில் துரொவா பட்டணம் வந்து சேர்ந்தனர் (அப். 20:6).

7. **துரோவா** - அவர்கள் தங்களுக்கு முன்னமே வந்திருந்த சீஷர்களுடன் சேர்ந்து கொண்டனர். அங்கு அவர்கள் ஏழு நாட்கள் தங்கியிருந்தனர். (அப். 20:6), வாரத்தின் முதலாம் நாளிலே அப்பம் பிடகுதலுக்கென்று சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் பிரசங்கத்தினால் சாய்ந்து மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்தான். பவுல் ஜெபித்து அவனை உயிரோடு எழுப்பினார் (அப். 20:7-12).

**8. ஆசோ, மித்திலேனே** - பின்பு பவுல் கரை வழியாயும், மற்றவர்கள் கப்பலேறியும் ஆசோ என்னுமிடத்திற்குப் போனார்கள்.'. பின் அங்கு எல்லோரும் ஒன்றாய்க் கூடி கப்பலேறி மித்திலேனே வந்து, அங்கிருந்து புறப்பட்டு, துரோகில்லியோன் ஊர்த்துறை வந்தார்கள் (அப். 20:13-15).

**9. துரோகில்லியான் ஊர்த்துறை** - இது சாமு தீவுக்கு எதிரேயுள்ள ஒரு துறைமுகம். அவர்கள் இங்கே வந்து தங்கி, மறுநாளில் மிலேத்துவுக்கு வந்தார்கள் (அப். 20:16).

**10. மிலேத்து** - இங்கிருந்துகொண்டு பவுல் எபேசுவுக்கு ஆள் அனுப்பி சபையின் மூப்பரை வரவழைத்தனர் (அப். 20:17). அவர், அவர்களுக்குப் புத்திசொல்லி, மந்தையை மேய்க்கும் விதத்தைக் கூறி, உள்ளே பிரவேசிக்கும் கொடிதான ஓநாய்களைக் குறித்து எச்சரித்தார் (அப். 20:18-35). என் முகத்தை இனிப்பார்க்கமாட்டீர்கள் என்று பவுல் சொன்னபடியினால் யாவரும் துக்கப்பட்டு அழுது அவரை வழி விட்டனுப்பினர் (அப்.'. 20:37, 38). இங்கிருந்து அவர்கள் கப்பலேறி கோஸ் தீவு, ரோது, தீவு ஆகியவற்றைக் கடந்து பத்தாரா பட்டணம் வந்து சேர்ந்தனர் (அப். 21:1).

**11. பத்தாரா** - அவர்கள் இங்கிருந்து பெனிக்கே தேசத்திற்குப் போகிற ஒரு கப்பலில் ஏறி, சீப்புரு தீவைக் கண்டு, அதை விட்டு, சீரியா நாட்டைச் சேர்ந்து, தீரு பட்டணத்துறையில் இறங்கினார்கள (அப். 21:2,3).

**12. தீரு** - அவர்கள் பிரயாணம் செய்த கப்பல் சரக்குகளை இறக்கும்படி அங்கு நின்றது. அந்நாட்களில் அவர்க்ள அங்குள்ள சீஷர்களுடன் ஏழு நாட்கள் தங்கியிருக்க வாய்ப்பு கிடைத்தது. வரப்போகிற தீமைகளை முன்னிட்டு எருசலேமுக்குப் போக வேண்டாம் என அவர்கள் கூறினர். கடற்கரையில் அவர்கள், தங்கள் மனைவிகளோடும் பிள்ளைகளோடும் வந்து அவர்களை வழி அனுப்பினர் (அப். 21:3-6).

**13. பித்தொலோமாய்** - அவர்கள் கப்பல் யாத்திரை முடித்து பித்தொலோமாயில் இறங்கி அங்குள்ள சகோதரருடன் ஒருநாள் தங்கினர் (அப். 21:7). அங்கிருந்து புறப்பட்டு அவர்கள் .செசரியாவிற்கு வந்தனர்.

**14. செசரியா** - அவர்கள் பிலிப்பு என்னும் சுவிஷேகனுடைய வீட்டிலே தங்கினர் (அப். 21:8). இங்கு அகபு என்னும் தீர்க்கதரிசி, தன் கைகளையும் கால்களையும் பவுலின் கச்சையால் கட்டிக்கொண்டு எருசலேமில் உள்ள யூதரால் பவுல் அனுபவிக்கப்போகும் உபத்திரவங்களைக் குறித்து தீர்க்கதரிசனம் கூறினார் (அப். 21:10, 11). லூக்காவும் மற்றவர்களும் எருசலேமுக்குப் போக வேண்டாம் என்று பவுலிடம் சொல்லியும் அவர் செவிகொடுக்கவில்லை (அப். 21:12-14).

**15. எருசலெம்** - அவர்கள் மினாசோன் என்ற பழைய சீஷனுடன் தங்கும்படி அச்சீஷனோடு எருசலேமுக்கு வந்தார்கள். சகோதரர் அவர்களைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள் (அப். 21:15-17).

**போதனை:**

கர்த்தருக்கு ஊழியஞ் செய்யும்படி புறப்படுகிற ஒருவன், கர்த்தருக்காக எந்தச் சூழ்நிலையையும் சந்திக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். சில சமயங்களில் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டு செல்லும் இடங்களிலுங்கூட உபத்திரவங்கள் உண்டாகலாம்; எனினும் அவன் அவற்றை சந்தோஷமாக சகிக்க ஆயத்தமாயிருந்து, எல்லா சூழ்நிலைகளிலும் தேவசித்தம் செய்ய வேண்டும்.

**மனப்பாடம்:** அப்போஸ்தலர் 20:24

பாடம் 9

## கிறிஸ்துவின் இரண்டம் வருகை

**(பகுதி I)**

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, நாற்பது நாளளவும் தமது சீஷர்களுக்குக் காணப்பட்டார். அதன் பின்பு அவர் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். அவ்விதம் உயிர்த்தெழுந்து வானத்திற்கு எடுத்துக்கெள்ளப்பட்ட இயேசு மீண்டும் இரண்டாமு் முறை வருவார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கும் பல பகுதிகள் வேதாகமத்தில் காணப்படுகின்றன. அவற்றைத் தெளிவாகப் பகுத்துப் படித்தால், அவருடைய இரண்டாம் வருகை, மூன்று பகுதிகளை கொண்டது என நாம் அறிந்து கொள்ளலாம். அவையாவன:

1. இரகசிய வருகை
2. அறுவடை
3. பகிரங்க வருகை

**1. இரகசிய வருகை:** இயேசு, மணவாட்டி அல்லது பூரணமாக்கப்பட்ட புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களைச் சேர்த்துக்கொள்ளும்படியாக வருவார் (I கொரி. 15:51,51; I தெச. 4:14-18).

இயேசு திடீரென எதிர்பாராத வேளையில் வருவதால் அவர் திருடனைப் போல் வருவார் என்று சொல்லப்பட்டுள்ளது. (I தெச. 5:2).

அவருக்காகக் ‘காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்காக’ அவர் வருவார் (எபி. 9:28). மூலபாஷையில், ‘அவருக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்காக’ என்று சொல்லப்பட்டுள்ளது.

இயேசுவின் இரகசிய வருகையின்போது, கிறிஸ்துவுக்குள் மரித்த பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் முதலாவதாக உயிரோடு எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப்பட்டு இரு கூட்டத்தாரும் ஆகாயத்தில் ஒன்றாகக் கூடுவார்கள். இவ்விரண்டு சம்பவங்களும் ஒரு கண்ணிமைப் பொழுதிலே நடக்கும் (I கொரி. 15:51, 52).

வேத வசனத்தில் இவ்விரு கூட்டத்தாருக்கும் பல்வேறு பெயர்கள் தரப்பட்டுள்ளன: மகிமையுள்ள சபை (எபே. 5:27); சிங்காசனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் ஆண்பிள்ளை (வெளி. 12:5); ஜெயங்கொண்ட பரிசுத்தவான்கள் (வெளி. 2:26,27) ; கற்புள்ள கன்னிகை (II கொரி. 11:2); எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபை (எபே. 1:23); புதிய எருசலேம், சீயோன் (எபி. 12:22 ; வெளி. 21 : 2 ; 14:1-5). இவர்களே அதிக மகிமை வாய்ந்த கூட்டத்தாராவர்.

இயேசுவின் இந்த இரகசிய வருகை மத்தேயு 24:36-51-இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மனப்பாடம்:** பிலிப்பியர் 1:9-11 ; I தெசலோனிக்கேயர் 5:23,24

--------------------

## பாடம் 10

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

(பகுதி II)

**2. அறுவடை:** உபத்திரவகால இரத்த சாட்சிகளைச் சேர்க்கும்படியாக இயேசுகிறிஸ்து மேகத்தில் தோன்றுவார் (மத். 24:30,31 ; வெளி. 7:9-17 ; 14: 14-16). இது அறுவடை என்று அழைக்கப்படுகிறது.

இயேசுவின் இரகசிய வருகைக்குப் பின், அதாவது ஆண்பிள்ளை சிங்காசனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு, வானத்திலே ஒரு யுத்தமுண்டாகும். மிகாவேலும் அவனுடைய தூதர்களும் வலுசர்ப்பத்தோடும் (சாத்தான்) அவனுடைய தூதர்களோடும் யுத்தம் செய்து, அவர்களைத் தோற்கடித்து, அவர்களைப் பூமியிலே விழுத்தள்ளுவார்கள் (வெளி. 12:7-10). அதன்பின்பு வலுசர்ப்பம் தன்னுடைய பலத்தையும் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும், மிருகம் அதாவது அந்திக்கிறிஸ்துவிற்குக் கொடுக்கும் (வெளி. 13:1-4). அந்திக்கிறிஸ்து ஏழு வருடங்கள் பூமியில் அரசாட்சி செய்வான். முதல் மூன்றரை வருடங்கள், ஸ்திரீக்கு, அதாவது கைவிடப்பட்ட சபைக்கு உபத்திரவம் நேரிடும் (வெளி. 12:13-17). அந்திக்கிறிஸ்து, அவர்களை உபத்திரவப்படுத்துவான். அநேகர் கர்த்தராகிய இயேசுவை மறுதலிப்பதற்கும், மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்வதற்கும் மறுத்து இரத்தசாட்சிகளாக மரிப்பார்கள் (வெளி. 13:7-17).

முதல் மூன்றரை வருடங்களின் முடிவில், இயேசு தம் சிரசின்மேல் பொற்கிரீடத்தைத் தரித்தவராயும் கையில் கருக்குள்ள அரிவாளைப் பிடித்தவராயும் மேகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறவராகத் தோன்றுவார். அப்போது, அக்காலத்தில் இரத்தசாட்சிகளாக மரித்தவர்களைக் கூட்டிச் சேர்க்கும்படியாக அவர் தம்முடைய தூதர்களை அனுப்புவார் (வெளி. 14:14-16 ; மத். 24:30,31).

**3. பகிரங்க வருகை:** அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியின் இரண்டாம் மூன்றரை வருட ஆட்சிக் காலத்தில் யூதர்களுக்கு மகா உபத்திரவம் உண்டாகும். இது எரேமியா 30:7-இல், 'யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம' என்று சொல்லப்பட்டுள்ளது. அந்திக்கிறிஸ்துவின் உபத்திரவத்தின் நிமித்தமாக யூதர்கள் தங்களுடைய மேசியாவின் (மீட்பரின்) வருகைக்காக புலம்பலோடும் கண்ணீரோடும் ஆவலோடும் காத்திருப்பார்கள். இரண்டாம் மூன்றரை வருட உபத்திரவ காலத்தின் முடிவில், துன்மார்க்கருக்குத் தக்க தண்டனை அளித்து, இந்தப் பூமியில் ஆயிரவருடங்கள் அரசாட்சி செய்யும்படியாக, இயேசு தம்முடைய பரிசுத்தவான்களோடுகூட, எல்லாரும் காணும்படியாக, தாம் வானத்துக்கு எழுந்தருளிப்போன அதே ஒலிவ மலையின் மேல் இறங்கி வருவார் (அப். 1:9-12 ; சக. 12:10-14 ; 14:3-5 ; II தெச. 1:7-10 ; வெளி. 19:17-21).

**அர்மகெதோன் யுத்தம்:** இஸ்ரவேல் தேசத்திலுள்ள அர்மகெதோன் என்னுமிடத்தில் அந்திக்கிறிஸ்து, கர்த்தரோடும் அவருடைய பரிசுத்தவான்களோடும் யுத்தம் பண்ணும்படியாக தன்னுடைய சேனைகளைக் கூட்டிச் சேர்ப்பான். அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினால் நாசமாக்குவார் (வெளி. 16:12-16; II தெச. 2:8 ; சக. 14:1-4 ; வெளி. 19:14-21). பின்பு, அந்திக் கிறிஸ்துவும் (மிருகமும்) கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு உயிரோடே அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள் (வெளி. 19:20). சாத்தான் ஆயிர வருடமளவும் கட்டப்பட்டவனாய் அகாதமான பாதாளத்திலே தள்ளப்படுவான். கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடுகூட தமது ஆயிர வருட அரசாட்சியை பூமியிலே ஆரம்பிப்பார் (வெளி. 20:1-4).

**போதனை:**

நம்முடைய கர்த்தர் தம் மணவாட்டியைச் சேர்த்துக் கொள்ளும்படி எந்த வேளையில் வருவாரென்று நமக்குத் தெரியாது. ஆகையால் நாம் விழித்திருந்து, அவரைச் சந்திக்க ஆயத்தமாகக் காணப்பட வேண்டும்.

**மனப்பாடம்:** சகரியா 12:10 ; மத். 24:42-44

-----------------

# பாடம் 11

## வெளிப்படுத்தின விசேஷத்திற்கு ஒரு முன்னுரை

வெளிப்படுத்தின விசேஷமானது, யோவான், 'கண்டவை'களும், 'இருக்கிறவை'களும், 'இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவை'களுமாகிய காரியங்களைக் கொண்டது (வெளி. 1:19). எதிர்கால சம்பவங்களான, பூரணமாக்கப்பட்ட சபையின் எடுத்துக்கொள்ளப்படுதல், அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை, கீழ்ப்படியாத இராஜ்யங்களின்மேல் செலுத்தப்படும் ஏழத்தனையான நியாயத்தீர்ப்பு, ஏழுவருட உபத்திரவம், கிறிஸ்துவுக்கும் அவருடைய பரிசுத்தவான்களுக்குமுரிய ஆயிர வருட அரசாட்சி, புதிய பூமி, புதிய வானம், புதிய எருசலேம் ஆகிய நித்திய பரலோக வாசஸ்தலங்கள்-இவை யாவும், 'இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள்' என்பதில் உட்படும். எனவே நித்திய மகிமையான சுதந்தரத்துக்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்காக நாம் இந்தப் புத்தகத்தைப் படித்து, நித்தியத்தில் நமக்காக ஆயத்தம்பண்ணப்பட்டுள்ளனவற்றைப் பற்றி, அதிகத் தெளிவானதும் பிரகாசமுமான தரிசனம் பெற்றுக்கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

**அதி. 1:** இது யோவான் கண்ட, மகிமையடைந்த கிறிஸ்துவைப் பற்றிய தரிசனமாகும்.

**அதி. 2,3:** 'இருக்கிறவைகள்' அதாவது, அந்த நாட்களில் இருந்த சபைகளின் நிலவரத்தையும் அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட தூதுகளையும் பற்றி இவ்வதிகாரங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு சபையும் தனக்குக் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தல்களின் வெளிச்சத்தில் தங்களுடைய குறைகளைக் கண்டு, அவற்றிற்காக மனஸ்தாபப்பட்டு, தங்களைத் திருத்திக் கொள்வதற்காக முதலாவதாக ஒவ்வொரு சபைக்கும் கர்த்தர் தம்மைப் பற்றிய வெளிப்படுத்தல்களைக் கொடுக்கிறார். பின்பு அவர் சபைகளின் நிலவரத்தையும், ஜெயங்கொண்டவர்களுக்குரிய பிரதிபலனையும் குறித்துப் பேசுகிறார். எல்லாத் தூதுகளும், 'ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்' என்னும் எச்சரிப்பின் வார்த்தைகளுடன் முடிவடைகின்றன.

[நான்காம் அதிகாரம் முதல், 'இனி சம்பவிப்பவைகளைப்' பற்றி விவரிக்கப்பட்டுள்ளன. 'இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை' யோவானுக்குக் காண்பிக்கும்படியாக 'இங்கே ஏறிவா' என்று அவருக்குச் சொல்லப்பட்டது (வெளி. 4:1). இப்படிச் சொல்லப்பட்டிருப்பதால் இதன்பின் கூறப்பட்டிருப்பவை யாவும் காலவரிசையின்படி கிரமமாகத் தரப்பட்டுள்ளன என்று நாம் எண்ணங் கொள்ளலாம். ஆனால் அது அப்படியல்ல. இந்தப் புத்தகமானது ஒரே தரிசனத்தை, இரு நோக்குகளிலிருந்து, அதாவது யூதரின் நோக்கிலிருந்தும், புறஜாதியாரின் நோக்கிலிருந்தும் (சபையின் நோக்கு) விவரித்துக் காண்பிக்கிறது.]

**அதி. 4, 5:** இவை, கிறிஸ்துவின் மணவாட்டியாக அமையும் பரிசுத்தவான்களைத் தவிர, பரலோகத்தில் மற்ற பரிசுத்தவான்களின் பல்வேறு நிலவரங்களைக் காட்டுகின்றன.

**அதி. 6-11:** இவற்றில், ஏழுவருட உபத்திரவ காலமானது யூதரின் தரிசனமாக விவரிக்கப்பட்டுள்ளது. இது, இஸ்ரவேல் புத்திரரின் சகல கோத்திரத்தாரிலுமிருந்து முத்திரையிடப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் (வெளி. 7:4-8), பொற்பீடம், தூபங்காட்டும் பொற்கலசம், தூபம் (வெளி. 8:3), எக்காளங்கள் (வெளி. 8:2), தேவாலயம் (வெளி. 11:1), இரண்டு ஒலிவ மரங்கள் (வெளி. 11:4), இரண்டு விளக்குத் தண்டுகள் (வெளி. 11:4), உடன்படிக்கையின் பெட்டி (வெளி. 11:19) ஆகியவற்றுடன் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இவை யாவும் ஒரு யூதன் தன்னுடைய நோக்கிலிருந்து இத்தரிசனத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ள உதவி செய்யக்கூடியவையாகும். உபத்திரவ காலத்தின் முதல் பாதி 6-ஆம் அதிகாரத்திலும் (ஏழு முத்திரைகள்

உடைக்கப்படுதலுடன்), இரண்டாம் பாதி 8-11 அதிகாரங்களிலும் (ஏழு எக்காளங்கள் ஊதப்படும் தரிசனம்) விவரிக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டுச் சபையைப் பற்றி இங்கே குறிப்பிடப்படவில்லை.

யூதரின் நோக்கிலிருந்து தரிசனத்தைக் கண்ட பின்பு, சகல தேசத்தாராகிய புறஜாதிகளுக்கு மறுபடியும் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும் என்று யோவானுககுச் சொல்லப்பட்டது (வெளி. 10:8-11). எனவே அதே தரிசனம் மீண்டும் புறஜாதியாரின் நோக்கிலிருந்து அல்லது சபையின் நோக்கிலிருந்து விவரிக்கப்பட்டுள்ளது. உபத்திரவ காலத்தின் முதல் பாதி அதி. 12-14-லும், இரண்டாம் பாதி அதி. 16-லும் விவரிக்கப்பட்டுள்ளது.

**அதி.** 12-14: இவற்றில், வானத்திலே அடையாளமாகக் காணப்பட்ட சூரியனை அணிந்த ஸ்திரீ (பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற சபை), சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்பிள்ளை, (புறஜாதியாரின் அல்லது சபையின் நோக்கிலிருந்து) உபத்திரவ காலத்தின் முதல் பாதி, ஆட்டுக்குட்டியானவருடன் சீயோன் மலையில் நிற்கும் 1,44,000 பேர் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

**அதி.** 15,16: இவற்றில், ஏழு வாதைகளையுடைய அல்லது தேவனுடைய கோபாக்கினையின் ஏழு கலசங்களையுடைய ஏழு தூதர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இது, (முன்பு கூறப்பட்டபடி, சபையின் நோக்கிலிருந்து) உபத்திரவ காலத்தின் இரண்டாம் பாதியைப் பற்றிய தரிசனமாகும்.

**அதி.** 17-19: இவ்வதிகாரங்கள் ஏழு வருட உபத்திரவ காலத்திற்குப் பின் நடக்கும் சம்பவங்களை விவரிக்கின்றன. 17,18 அதிகாரங்களில், 'மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்' என்னும் மகா வேசியின் மீது வந்த நியாயத்தீர்ப்பைக் குறித்து நாம் வாசிக்கிறோம். இது விழுந்து போன சபையாகிய மத சம்பந்தமான பாபிலோன் ஆகும். அதிகாரம் 19-இல், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் பல்வேறு கூட்டத்தினரும் அவர்களுடைய அறிக்கைகளும், ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம், கலியாண விருந்து, அர்மகெதோன் யுத்தம் ஆகியவற்றைப் பற்றிய தரிசனத்தை நாம் காண்கிறோம்.

**அதி.** 20-22: இவை, ஆயிர வருட அரசாட்சி, கோகு மாகோகு யுத்தம், வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு, நித்திய இராஜ்யம் ஆகியவற்றைக் குறித்து விவரிக்கின்றன.

இந்தப் புத்தகத்தை ஆக்கியோன் தேவன்தாமே ஆவார். அதுவே இப்புத்தகத்தின் முதல் வாக்கியமாகக் கூறப்பட்டுள்ளது - தேவன்தாமே இந்தத் தரிசனத்தைக் கிறிஸ்து மூலமாய், ஒரு தூதனால் யோவானுக்குக் கொடுத்தார் (வெளி. 1:1). யோவான் பத்மு என்னும் தீவிற்கு நாடுகடத்தப்பட்டிருந்தார். ஆனால் அடுத்த வருடத்தில்தானே அவர் விடுதலையாக்கப்பட்டு, எபேசுவுக்குத் திரும்பச் செல்லும்படி அனுமதிக்கப்பட்டார். வெளிப்படுத்தின விசேஷம் 1:9-இல், 'நான் .............தீவிலே இருந்தேன்' என்று கூறப்பட்டிருப்பது, யோவான் பத்மு தீவில் நாடுகடத்தப்பட்டவராக இருந்தபோது இந்தத் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார். ஆனால், விடுதலையாக்கப்பட்ட பின்னரே இந்தப் புத்தகத்தை எழுதினாரென்பதைக் குறிப்பதாயிருக்கலாம்.

இந்தப் புத்தகம் முழுவதும் தேவனைத் துதிக்கும் பகுதிகளால் நிறைந்துள்ளது (வெளி. 4:11 ; 5:12,13 ; 7:10,12 ; 15:3,4 ; 19:1-7 போன்றவை).

இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று இப்புத்தகத்தின் முதல் அதிகாரத்திலும் கடைசி அதிகாரத்திலும் எழுதப்பட்டிருப்பதை நாம் வாசிக்கிறோம் (வெளி. 1:3 ; 22:7). இப்புத்தகத்தின் முக்கியமான அம்சமாகிய கர்த்தரின் வருகை என்பது, இப்புத்தகத்தின் முதல் வார்த்தைகளில் ஒன்றாகவும், அதற்காக யோவான் செய்யும் ஜெபமாக, அதன் கடைசி வார்த்தைகளில் ஒன்றாகவும் இருக்கிறது (வெளி. 1:7 ; 22:20). அதைக் குறித்து

இப்புத்தகத்தின் வேறுசில பகுதிகளிலும் கூறப்பட்டிருக்கிறது (வெளி. 2:25 ; 3:3,11 ; 16:15 ; 22:7,12,20). இதன் முதல் அதிகாரத்திலும் கடைசி அதிகாரத்திலும், 'காலம் சமீபமாயிருக்கிறது' என்ற எச்சரிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது (வெளி. 1:3 ; 22:10). நாம் நினைப்பதைக் காட்டிலும் கர்த்தருடைய வருகை ஒருவேளை அதிக சமீபமாயிருக்காலம்.

**மனப்பாடம்:** ஆமோஸ் 4:12

----------------

## பாடம் 12

## உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள்

(பகுதி I)

### I கொரிந்தியர் 15-ஆம் அதிகாரம்

இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்ததினாலே உண்மையான கிறிஸ்தவர்கள் ஒரு மகிமையான உயிர்த்தெழுதலைப் பற்றியும், பரலோகத்திலே ஆயத்தம் பண்ணப்பட்டுள்ள நித்திய சுதந்தரத்தைக் குறித்தும் ஒரு ஜீவனுள்ள நம்பிக்கை உடையவர்களாய் இருக்கின்றனர் (I பேதுரு 1:4). கிறிஸ்து உயிர்த்தெழுந்திராவிட்டால், நம்முடைய விசுவாசம் வீணாயிருக்கும் (I கொரி. 15:17). ''இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்'' (I கொரி. 15:19). இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததினால், மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் (II தீமோ. 1:10). இயேசு, பிசாசு, மரணம், பாதாளம் ஆகியவற்றை ஜெயித்து என்றென்றைக்குமாய் ஜீவனோடிருக்கிறார். அவர் பரலோகத்திலும் பூலோகத்திலும் சகல அதிகாரமும் உடையவராய், பிதாவின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டவருமாயிருக்கிறார். அவர் நமக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார். நமக்காகப் பரிந்து பேசும்படி, அவர் என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறார். ஆகவேதான் நாம் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்து, நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை நோக்கி முன்னேறிச் செல்கிறோம் (வெளி. 1:18 ; மத். 28:18 ; எபி. 7:25 ; யோவான் 14:3).

உயிர்த்தெழுதலில் பல வரிசைகளும், வித்தியாசமான மகிமைகளும் காணப்படுகின்றன (I கொரி. 15:23,40,41). அதில் மொத்தம் ஏழு வரிசைகள் உண்டு. முதல் ஐந்து வரிசைகளும் ; 'முதலாம் உயிர்த்தெழுதல்' அல்லது ; 'மேன்மையான உயிர்த்தெழுதல்' என்று அழைக்கப்படுகின்றன (வெளி. 20:5,6 ; எபி. 11:35). இவற்றில் முதல் வரிசை கிறிஸ்து. இது ஏற்கனவே நடந்தாயிற்று. மீதயானவை ஆயிர வருட அரசாட்சிக்கு முன் நடப்பவை ஆகும்.

உயிர்த்தெழுதலின் கடைசி இரண்டு வரிசைகளும் ; 'இரண்டாம் உயிர்த்தெழுதல்' அல்லது ; 'பொதுவான உயிர்த்தெழுதல்' என்று அழைக்கப்படுகின்றன (வெளி. 20:12,13). இவை ஆயிர வருட அரசாட்சிக்குப் பின்பு நடந்தேறுபவையாகும்.

**போதனை:**

கிறிஸ்துவின் இரகசிய வருகையில் மறுரூபமாகுதல் அல்லது அப்போதுள்ள உயிர்த்தெழுதலில் பங்கு பெறுதலே நம்முடைய குறிக்கோளாக இருக்க வேண்டும்.

**மனப்பாடம்:** I பேதுரு 1:3-5

## பாடம் 13

## உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள்

(பகுதி II)

### முதலாம் உயிர்த்தெழுதல் அல்லது மேன்மையான உயிர்த்தெழுதல்

1. **முதல் வரிசை:** கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (I. கொரி. 15:20). அவர் பாவம் அறியாதவர் (II கொரி. 5:21). அவர் பாவஞ் செய்யவில்லை (I பேதுரு 2:22). அவரிடத்தில் பாவம் இல்லை (I யோவான் 3:5). அவர் பரிசுத்தரும் குற்றமற்றவரும் மாசில்லாதவருமாயிருந்தார் (எபி. 7:26). அவர் பரீட்சிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு உத்தமராய் விளங்கினார் (எபி. 4:15),

2. **இரண்டாம் வரிசை:** மகிமையுள்ள சபை (எபே. 5:27), பூரணராக்கப்பட்ட பரிசுத்தவான்கள் (எபே. 4:11,12), ஜெயங்கொண்ட ஆண்பிள்ளை (வெளி. 12:5), கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவர்கள் (கொலோ. 1:28), ஆவி ஆத்துமா சரீரம் முழுவதிலும் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் (I தெச. 5:23) என்ற பலவித பெயர்களால் அழைக்கப்படும் சபையாகும்.

நம்முடைய கர்த்தரின் இரகசிய வருகையின்போது, இவர்களில் நித்திரையடைந்தவர்கள் முதலாவதாக உயிரோடெழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருப்பவர்கள் மறுரூபமாக்கப்பட்டு, ஆகாயத்தில் கர்த்தரை சந்திக்கும்படியாக எடுத்துக் கொள்ளப்படுவர் (I தெச. 4:16,17).

3. **மூன்றாம் வரிசை:** உபத்திரவ காலத்து இரத்த சாட்சிகள் (வெளி. 7:9-14 ; 14:14-16). இவர்கள் இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படாமல், கைவிடப்பட்டவர்கள். இவர்கள் அந்திக்கிறிஸ்துவினால் உபத்திரவப்படுத்தப்பட்டு, இரத்த சாட்சிகளாக மரிக்கிறார்கள். இவர்கள் இயேசு தம்முடைய மணவாட்டியுடன் வரும்போது அவரை எதிர்கொண்டு சென்ற ; 'புத்தியுள்ள கன்னிகைகள்' என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றனர் (மத். 25:1-10). இவர்கள் முதல் மூன்றரை வருட உபத்திரவ காலத்தின் முடிவில் உயிர்த்தெழுவார்கள். இந்த இரத்த சாட்சிகளைச் சேர்க்கும்படியாக இயேசு மேகத்தில் வெளிப்படுவார்.

4. **நான்காம் வரிசை:** இரண்டு சாட்சிகள் (ஏனோக்கு, எலியா) (வெளி. 11:3-12). இவர்களது உயிர்த்தெழுதல் இரண்டாம் மூன்றரை வருட உபத்திரவ கால்த்தின்போது சம்பவிக்கும். மரணத்தை ருசிபாராமல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏனோக்கும் எலியாவும் இந்த நாட்களில் பிரசங்கிக்கும்படியாக பூமிக்குத் திரும்பி வந்து, அந்திக்கிறிஸ்துவினால் கொலை செய்யப்பட்டு, மூன்றரை நாட்களுக்குப் பின்பு எழுப்பப்படுவார்கள். இவர்களே பழைய ஏற்பாட்டின் முதற்பலன்களாவர்.

5. **ஐந்தாம் வரிசை:** பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் அனைவரும், பொதுவான இரத்தசாட்சிகளும் (வெளி. 11:18,19 ; 6:9-11). ஏழு வருட உபத்திரவ காலத்தின் முடிவில் இயேசு தமது பரிசுத்தவான்களோடு பூமியில் ஆயிர வருடம் ஆளுகை செய்யும்படியாக இறங்கி வருவார். அப்போது இவர்கள் உயிர்த்தெழுவார்கள். கண்கள் யாவும் அவரைக் காணும்.

**போதனை:**

நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதுமாக பரிசுத்தமாக்கப்பட்டு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகைக்காக குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதற்காக, நாம் நம்மை சமாதானத்தின் தேவனுக்கு முற்றிலுமாக ஒப்படைக்க வேண்டும்.

**மனப்பாடம்:** வெளிப்படுத்தல் 20:4-6

## பாடம் 14

## உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள்

(பகுதி III)

**மத். 25:31-46 ; வெளி. 20:11-15**

### இரண்டாம் உயிர்த்தெழுதல் அல்லது பொதுவான உயிர்த்தெழுதல்

உயிர்த்தெழுதலின் வரிசையில், ஆறாம், ஏழாம் வரிசைகள், ; 'இரண்டாம் உயிர்த்தெழுதல்' என அழைக்கப்படுகின்றன. இது ஆயிர வருட அரசாட்சிக்குப் பின்னர், வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின்போது நடைபெறுகிறது.

ஒரு பெரிய வெள்ளைச் சிங்காசனம் வைக்கப்பட்டு, இயேசு அதின் மேல் வீற்றிருக்கிறார். அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின; மரித்தோராகிய சிறியோரும் பெரியோரும் அவருக்கு முன்பாக நிற்கின்றனர். புஸ்தகங்கள் திறக்கப்படுகின்றன. ஜீவ புஸ்தகமுங்கூட திறக்கப்படுகிறது. அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள் (வெளி. 20:11,12 ; மத். 25:31-46).

1. **ஆறாம் வரிசை:** இரட்சிக்கப்பட்டு, ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள் - ஆனால் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறாதவர்கள். இவர்கள் ஆறாம் வரிசையில் உயிரோடெழுப்பப்பட்டு, நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்கிறார்கள் (புதிய பூமி) (வெளி. 20:13-15 ; மத். 25:31-40).

2. **ஏழாவது வரிசை:** ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத துன்மார்க்கர் உயிரோடெழுப்பப்பட்டு, நித்திய ஆக்கினையை அடையும்படி போவார்கள் (அக்கினிக் கடல்) (வெளி. 20:13-15 ; மத். 25:41-46).

**போதனை:**

தேவன் நம்மை இரட்சித்து, பரிசுத்தாவியினால் நிறைத்து, பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் வைத்திருப்பது, நாம் சாதாரண உயிர்த்தெழுதலில் பங்குபெறும்படியாக அல்ல; மணவாட்டிக்குரிய உயிர்த்தெழுதலின் வரிசையில் காணப்படுவதற்கே ஆகும்.

**மனப்பாடம்:** மத்தேயு 25:34-36

## பாடம் 15

## இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல்

பிரதிஷ்டை பண்ணப்பட்டவர்களாய் ஜீவிக்கும் பரிசுத்தவான்கள் விசுவாசத்தினால் ஜீவித்து பரலோகத்துக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதோடு, பாவங்களிலிருந்தும் பாவிகளிலிருந்தும்; உலகத்திலிருந்தும் உலகப் பொருட்களிலிருந்தும்; சுயத்திலிருந்தும் விடுதலை பெற்றுப் பரிசுத்தமாக்கப்பட வேண்டும். பரிசுத்தமாகுதல் என்பதற்கு தேவனுக்கென்று 'வேறுபிரிதல்' என்று அர்த்தம். நாம் பூரணத்திற்குக் கடந்து செல்வதற்குப் பூரண பரிசுத்தமாகுதல் தேவை. நாம் மூன்று விதங்களில் பரிசுத்தமாக்கப்படுகிறோம். அவையாவன:

1. கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் (எபி. 13:12,13)

2. தேவனுடைய வசனத்தினால் (யோவான் 17:17)

3. பரிசுத்த ஆவியினால் (ரோமர் 15:15)

## இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதலின் அவசியம்:

இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் என்பது பாவங்களிலிருந்தும் பாவிகளிலிருந்தும் வேறுபிரிவதாகும். இது இரட்சிப்பில் ஆரம்பிக்கிறது. தம்முடைய சொந்த இரத்தத்தால் ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக கர்த்தராகிய இயேசு நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். நாம் பரிசுத்தமாக்கப்படும் படியாக பாளயத்திற்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போக வேண்டும் என்று எபிரெயர் 13:12,13-இல் வாசிக்கிறோம். பாளயம் என்பது இரட்சிக்கப்பட்ட ஜனங்களைக் கொண்டது எனக் கூறலாம். இவர்கள் மத்தியில் காணப்படும் பின்மாற்றக்காரர், கள்ளப்போதகர் ஆகியோரிடமிருந்து நம்மை நாம் வேறுபிரித்துக் கொண்டு, பாளயத்துக்குப் புறம்பே, நிந்தையை சுமக்கவும், கர்த்தரோடு பாடுபடவும் ஆயத்தமாக, கர்த்தருக்கென்று வேறுபிரிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். நாம் யார் யாரை விட்டு வேறு பிரிந்து ஜீவிக்க வேண்டும் என்பதைக் கீழே காண்கிறோம்:

(i) மாறுபாடுள்ள சந்ததியார் (அப். 2:40)

(ii) உபதேசத்திற்கு விரோதமாகப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குபவர்கள் (ரோமர் 16:17)

(iii) அப்போஸ்தலர் வழிகாட்டுகிறபடி நடவாமல் வேறுவிதமாய் நடப்பவர்கள் (பிலி. 3:16-18)

(iv) வசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் (II தெச. 3:14)

### சிவப்புக் கிடாரி:

எண்ணாகமம் 19-ஆம் அதிகாரத்தில் சிவப்புக் கிடாரியைப் பற்றிய பிரமாணத்தை நாம் வாசிக்கிறோம். இரத்தத்தினால் உண்டாகும் பரிசுத்தமாகுதலுக்கு சிவப்பான கிடாரி ஒரு நிழலாகும். முழு இஸ்ரவேல் சபைக்காகவும், பழுதற்றதும், ஊனமற்றதும், நுகத்தடிக்குட்படாததுமான ஒரு சிவப்புக் கிடாரி கொண்டு வரப்பட்டு, ஆசாரியனிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. அவன் அதைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய், அதைக் கொன்று அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராக ஏழுதரம் தெளித்தான். அதன் பின்பு, அந்த முழுக் கிடாரியும் எரிக்கப்பட்டது.

### கிடாரியின் தன்மைகள் (எண். 19:2):

**பழுதற்றது:** குற்றமில்லாத தன்மை. இயேசு பாவமில்லாதவராயிருந்தார் (I யோவான் 3:5). அவர் நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத்

தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார் என்று எபிரெயர் 9:14-இல் நாம் வாசிக்கிறோம். நாமும் இப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.

**ஊனமில்லாதது:** நாம் அறிந்த சத்தியத்திற்கு ஏற்றபடி ஜீவிக்காவிட்டால், நம்மில் ஊனம் உண்டாகிறது. எனவே, 'ஊனமில்லாத தன்மை' என்பது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் போல வெளிப்பிரகாரமான ஜீவியத்திலும் குற்றமில்லாததும் கண்டிக்கப்படாததுமான அனுபவத்தைக் குறிக்கிறது (கொலோ. 1:21).

**நுகத்தடிக்குட்படாதது:** பாவமோ மாம்சமோ உலகமோ நம்மை அடிமைப்படுத்தாத ஒரு ஜீவியத்தை இது காண்பிக்கிறது. (கலா.5:1).

**அதன் இரத்தத்தைத் தெளித்தல் (எண். 19:4):** கிடாரி கொல்லப்பட்டு, அதனுடைய இரத்தம் ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராக ஏழுதரம் தெளிக்கப்பட்டது. இது பரிசுத்தத்துக்காக நாம் நம் வேறுபாட்டின் ஜீவியத்தைப் பாதுகாத்துக் கொள்வதைக் காண்பிக்கிறது.

**அதில் சுட்டெரிக்கப்பட வேண்டிய பகுதிகள் (எண். 19:5):** கிடாரியின் தோல், மாம்சம், இரத்தம், சாணி போன்றவை சுட்டெரிக்கப்பட வேண்டும். அவற்றின் ஆவிக்குரிய அர்த்தங்கள்.

தோல்: ஜாதி, பாஷை போன்ற வித்தியாசங்கள்

மாம்சம்: ஆவி, ஆத்துமா, சரீரத்தில் வெளிப்படும் மாம்ச சுபாவங்கள்.

இரத்தம்: ஜீவனை இரட்சிக்க விரும்புதல்.

சாணி: இலாபமாயிருந்தவைகளெவைகளோ அவற்றைக் கிறிஸ்துவுக்கென்று குப்பையாக எண்ணாதிருத்தல்.

**தீட்டுக்கழிக்கும் ஜலம்:**

சிவப்பான கிடாரி எரிகிற அக்கினியில் கேதுருக்கட்டை, ஈசோப்பு, சிவப்பு நூல் ஆகியவை சேர்த்து எரிக்கப்படுகிறது. கேதுருக்கட்டை சரீரத்தையும், ஈசோப்பு ஆத்துமாவையும், சிவப்பு நூல் ஆவியையும் காட்டுகிறது. அதனுடைய சாம்பல் சுத்தமான ஒரு இடத்திலே கொட்டி வைக்கப்பட்டது. சாம்பலில் கொஞ்சம் எடுத்து, ஒரு பாத்திரத்தில் போட்டு, அதின்மேல் ஊற்று ஜலம் வார்த்து தீட்டுக்கழிக்கும் ஜலம் உண்டாக்கப்படுகிறது (எண். 19:1-9,17,18). தீட்டுக்கழிக்கும் ஜலம் இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காகக் காத்து வைக்கப்பட வேண்டும். அது பாவத்தைப் பரிகரிக்கும் (எண். 19:9). இந்தத் தீட்டுக்கழிக்கும் ஜலம் இஸ்ரவேலரின் மத்தியில் தீட்டுப்பட்ட ஒருவனைச் சுத்திகரிப்பதற்கு அவன்மேல் தெளிக்கப்பட்டது. தீட்டுப்பட்டிருக்கிற ஒருவன்மேல் இந்த ஜலம் தெளிக்கப்படும் போது அவன் சுத்தமாயிருப்பான். இது அறிக்கையிடுதலைக் காட்டுகிறது. இவ்விதம் அவன் தன்னைச் சுத்திகரித்துக் கொள்ளாதிருந்தால் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் (எண். 19:20).

**போதனை:**

கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பத்தில் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவங்களற சுத்திகரிக்கப்படும் நாம், முற்றிலும் பரிசுத்தமாக்கப்படும்படியாக, பாவங்களிலிருந்தும் பாவிகளிலிருந்தும் நம்மை நாமே வேறுபிரித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், நாம் தீட்டுப்பட்டுப் போவோம். நம்மைப் பரிசுத்தமாக்க கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நமக்காகச் சிந்தப்பட்டது. அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நாம் பூரண பரிசுத்தமாகுதலுக்குக் கடந்து போக வேண்டும்.

**மனப்பாடம்:** எபிரெயர் 13:12-14

## பாடம் 16

## திரித்துவ தேவன்

(பகுதி I)

தேவன் ஒருவரே: எனினும் அவர் மூன்று ஆள்தத்துவங்களுடையவர் - பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்தாவியானவராகிய தேவன். இம்மூவரும் தனித்தனி ஆள்தத்துவங்கள் ஆவர். இருப்பினும், அவர்கள் ஒருவருக்கொருவர் சமமானவர்கள்: நித்தியமாய் நிலைத்திருப்பவர்கள். திரித்துவ தேவன் பேரிலுள்ள விசுவாசம் சபையின் முதுகெலும்பாகும்.

1. மூலபாஷையாகிய எபிரேபு பாஷையில் தேவனைக் குறிப்பதற்காக உபயோகிக்கப்பட்டிருக்கும், 'எலோஹிம்' (ELOHIM) என்னும் பெயர் இரண்டிற்கும் மேற்பட்டதைக் குறிக்கும் பன்மைச் சொல்லாகும். அது, தேவன் திரித்துவர் என்பதை வெளிப்படுத்துகிறது - '**நமது** சாயல்', '**நம்மில்** ஒருவரைப் போல் ஆனான்'; '**நாம்** இறங்கிப் போய்' என உபயோகிக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளினாலே இது தெளிவாகிறது (ஆதி. 1:26: 3:22: 1:7).

2. உலகத்தோற்றத்துக்கு முன் நித்திய தேவன் திரித்து வராயிருந்தார் (யோவான் 17:24 : எபி. 7:3).

3. தேவன் திரித்துவராயிருக்கக் காரணம் என்ன?

மனுஷன் அன்பில் பரிசுத்தமுள்ளவனும் குற்ற மில்லாதவனுமாயிருக்க வேண்டுமென்பது அன்பின் பூரணரான தேவனின் நோக்கமாகும் (எபே. 1:4). இந்த நோக்கத்தை நிறைவேற்றும்படி தேவன் திரித்துவராயிருந்து நம் அன்பை வெளிப்படுத்தினார்.

பிதா - மனுஷனைச் சிருஷ்டிக்கும் முன்னரே அவனுக்குத் தேவையான சகலத்தையும் உண்டாக்கினார். அவர் எல்லா நன்மைகளுக்கும் ஊற்றாயிருக்கிறார் (யாக். 1:17).

குமாரன் - பிதாவுக்குச் சமமாயிருந்தும் அவர் மனுஷன் நிமித்தமாய் தம் அன்பை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டு சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறானார் (கொலோ. 1:15); தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்துக் கீழ்ப்படிந்தார்.

பரிசுத்தாவியானவர் - நம்மேலுள்ள அன்பினால் ஒரு ஆசிரியனைப் போலிருந்து, தேவனுக்குப் பிரியமான பலியாக நம்மை மாற்றுகிறார் (ரோமர் 15:15).

4. சிருஷ்டிப்பில் திரித்துவம்:

"ஆதியிலே வார்த்தை இருந்தது:.......அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று" (யோவான் 1:1-3). 'தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்' (ஆதி. 1:2). இங்கு, பிதாவாகிய தேவன், வார்த்தையாகிய குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று ஆள்தத்துவங்களையும் நாம் ஒருமிக்கக் காண்கிறோம்.

5. மனிதன் திரித்துவத்திற்கு ஒரு மாதிரி:

வேதாகமம் மனுஷனை ஆவி, ஆத்துமா, சரீரம் என மூன்று பாகங்களாகத் தெளிவாக வெளிப்படுத்திக் காட்டுகிறது (I தெச. 5:23) மனுஷனிலுள்ள மூன்று பகுதிகளும் பிரிந்து தனித்தனியே கிரியை செய்ய முடியாது. ஆனால் திரித்துவ

மனுஷனைத் தம் பூரணத்திற்கு கொண்டுவரும்படி திரித்துவ தேவன் - பிதா, குமாரன், பரிசுத்தாவியானவர் - தனித்தனியாகக் கிரியை செய்யக் கூடியவர்களாயிருக்கிறார்கள்.

6. பழைய ஏற்பாட்டில் திரித்துவம்:

"நான் ஆதிமுதற்கொண்டு அந்தரங்கத்தில் பேசவில்லை: அது உண்டான காலந்துவக்கி அங்கே நான் இருந்தேன்: இப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும். அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்" (ஏசாயா 48:16). இவ்வசனத்தில் திரித்துவ தேவனின் மூன்று ஆள்தத்துவங்களையும் நாம் காண்கிறோம்.

7. புதிய ஏற்பாட்டில் திரித்துவம்:

(i) இயேசு ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறினவுடனே. 'பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார்.' 'நீர் என்னுடைய நேசகுமாரன்' என்ற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று (லூக்கா 3:21,22).

(ii) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானங் கொடுக்கும்படி கர்த்தராகிய இயேசு தம் சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (மத். 28:19)

(iii) "நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே [பரிசுத்த ஆவி]. பிதாவிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் [குமாரன்] மூலமாய்ப் பெற்றிக்கிறோம்" (எபே. 2:18).

(iv) 'பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பார்களே' (I யோவான் 5:7).

(v) "இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்...... அவர் மேல் நீங்களும் ஆவியினாலே [பரிசுத்த ஆவி] தேவனுடைய [பிதா] வாசஸ்தலமாகக கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (எபே. 2:20-22).

(vi) "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே...... சாட்சி கொடுக்கிறார். நாம்........ தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" (ரோமர் 8:16,17).

(vii) "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக" (II கொரி. 13:14).

(viii) "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கபடுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது" (I பேதுரு 1:2).

(ix) "நீங்களோ....... பரிசுத்தாவிக்குள் ஜெபம்பண்ணி தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு........ கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள்" (யூதா 20,21).

## பாடம் 17

## திரித்துவ தேவன்

(பகுதி II)

8. பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுவும் ஒரே ஆள்தத்துவம் அல்ல:

(i) ''நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து' (யோவான் 4:34). இதில், 'நான்' என்பதும், 'என்னை அனுப்பினவர்' என்பதும் ஒரே ஆள்தத்துவமாயிருக்க முடியாது.

(ii) இயேசுவே பிதாவாக இருந்தால், 'உலகத்தோற்றதுக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால்' (யோவான் 17:24) என்று இயேசு கூறியது அர்த்தமற்றதாகிவிடும்.

(iii) இயேசுவும் பிதாவும் இரு ஆள்தத்துவங்களாயிராவிட்டால், 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்' (மத். 27:46) என்று இயேசு சத்தமிட்டது அர்த்தமற்றதாகிவிடும்.

9. குமாரனும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல:

(i) "நான் [இயேசு] போகாதிருந்தால் தேற்றரவாளான் [பரிசுத்த ஆவியானவர்] உங்களிடத்தில் வரார்: நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" (யோவான் 16:17).

(ii) ஆவியானவர் புறாவைப் போல் இயேசுவின்மேல் இறங்கினார் (மத். 3:16).

(iii) "எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" 12:32).

(iv) 'சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்' என இயேசு கூறினார் யோவான் 16:13).

10. பிதாவும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல:

(i) 'சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் [பிதா], உங்களுக்குத் தந்தருளுவார்' (யோவான் 14:16,17).

(ii) 'கர்த்தராகிய ஆண்டவரும் [பிதா], அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்' (ஏசாயா 48:16).

(iii) 'பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று...... பொழிந்தருளினார்' (அப். 2:33).

தேவன் திரித்துவர் என்பதை நிருபிக்க இவ்வாறு இன்னும் பல வசனங்களை ஆதாரமாகக் கூறலாம்.

**போதனை:**
மனுஷன் தமக்கு முன்பாக அன்பில் பரிசுத்த முள்ளவனும் குற்றமில்லாதவனுமாயிருப்பதற்காக தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துஇயேசுவுக்குள் அவனைத் தெரிந்துகொண்டார். இந்நோக்கம் அவனில் நிறைவேறும்படியாக, அன்பின் தேவன் - அன்பின் பிதாவாய், அன்பின் குமாரனாய், அன்பின் பரிசுத்தாவியானவாராய் வெளிப்பட்டார். எனவே மனிதன் தன் ஆவி ஆத்துமா சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டு கர்த்தராகிய இயேசு வரும்போது குற்றமற்றவனாய்க் காக்கப்பட்டிருக்க வேண்டும்.

**மனப்பாடம்:** I யோவான் 5:7: யோவான் 17:21:
I கொரிந்தியர் 13:14

## பாடம் 18

## கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியம்

"இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது: நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்" (எபே. 5:31,32).

கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்திற்கு மூன்று அமசங்கள் உள்ளன:

1. மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விடுவது
2. தன் மனைவியுடன் இசைந்திருப்பது
3. இருவரும் ஒரே மாம்சமாயிருப்பது

### 1. மனஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விடுவது:

ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து, தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பது போல (ஆதி. 2:24). இயேசுவும் சபையில் அன்பு கூர்ந்தபடியினால், பிதாவின் மடியையும் சிங்காசனத்தையும் பரலோகத்திலுள்ள சகல மகிமையையும் கனத்தையும் விட்டு, மனித சாயலில் பூமிக்கு வந்தார். அதன் பின்னர், "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:25-27).

### 2. தன் மனைவியுடன் இசைந்திருப்பது:

ஒரு புருஷனும் அவன் மனைவியும் அன்பு, கீழ்ப்படிதல் இவற்றின் மூலமாக ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருப்பதுபோல, கிறிஸ்துவும் சபையும் ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற இந்த ஜீவியத்தின் மூலம், திராட்சச்செடியில் நிலைத்திருக்கிற கொடியைப் போல, சபையானது மிகுந்த கனிகளைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது (யோவான் 15:5,7). கர்த்தரோடு இசைந்திருக்கிறவன், அவருடனே ஒரே ஆவியாயிருந்து (I கொரி. 6:17), தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி அவருடனே விவாகம் செய்யப்பட்டிருக்கிறான் (ரோமர் 7:4).

### 3. இருவரும் ஒரே மாம்சமாயிருப்பது:

ஆதாம் ஏவாளைப் பார்த்து, "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்: இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனனப்படுவாள்" (ஆதி. 2:23) என்று கூறினான். ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து அவளைப் போஷித்துக் காப்பாற்றுகிறான் (எபே. 5:25,29). புருஷன் தன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்: மனைவி தன் புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கிறாள் (எபே. 5:23,24). எனவே அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஐக்கியம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையே காணப்படுகிறது.

**போதனை:**

கிறிஸ்து பரலோகத்தின் சகல மகிமைகளையும் விட்டு தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்துபோல, நாமும் அவரில் அன்புகூரும்படியாகவும், அவருடைய பெரிதான அன்புக்குப் பாத்திரராகக் காணப்படும்படியாகவும், நம்முடைய சகல சிற்றின்பங்களையும் தியாகம் செய்ய வேண்டும்.

**மனப்பாடம்:** எபேசியர் 5:25-27

## பாடம் 19

## தேவனுடைய வாசஸ்தலங்கள்

(பகுதி I)

கர்த்தர் பரலோகத்திலே மிகச் சிறந்ததும், உன்னத மானதும், பரிசுத்தமானதுமான இடமாகிய சீயோனைத் தமது வாசஸ்தலமாகத் தெரிந்தெடுத்து, அங்கே வாசம்பண்ணுகிறார் என்று சங்கீதம் 132:13,14 - இல் நாம் பார்க்கிறோம், "இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்: அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" என்று நாம் வாசிக்கிறோம் (வெளி. 21:3), தேவன் எப்பொழுதும் மனுஷரோடு வாசம்பண்ணுவதையே வாஞ்சிக்கிறார் என்பதை இந்த வசனங்கள் காட்டுகின்றன. மனுஷனைச் சிருஷ்டித்தது முதல் இந்த பூமியில் ஒவ்வொரு காலத்திலும் அவர் எவ்விதம் மனுஷனோடு வாசம்பண்ணினார் என்பதைக் கீழே காண்போம்.

**பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலங்கள்:**

1. **ஏதோன் தோட்டம்:** ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழும் வரை, தேவன் அவர்களோடு ஏதேன் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார் (ஆதி. 3:8). மனிதன் நன்மை தீமை அறியும் விருட்சத்தின் கனியையும் புசிக்கக் கூடியவனாய் தேவனைப் போலவே இருக்கும் நிலையை அடையும் வரையிலும், அவன் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து தேவனோடுள்ள இந்த ஐக்கியம், நெருங்கிய தொடர்பு இவற்றால் ஜீவனில் வளர வேண்டும் என தேவன் விரும்பினார். ஆனால் மனிதன் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் குறிக்கப்பட்டிருந்த வேளைக்கு முன்பாக நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்து, தன்னைக் குறித்து தேவன் கொண்டிருந்த அழகான திட்டத்தைப் பாழாக்கினான். இருப்பினும், தேவன் தம்முடைய அளவிட முடியாத அன்பினாலும் இரக்கத்தினாலும் தம்முடைய நோக்கத்தில் மாறாதவராக மனிதனோடு வாசம்பண்ணும்படியாக அவனைத் தேடி வருகிறார்.

2. **வனாந்தரத்திலிருந்த ஆசரிப்புக் கூடாரம்:** இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்னர். சிவந்த சமுத்திரத்தை கடந்து வனாந்தரத்திற்கு வந்தனர். தேவன் மோசேயிடம், "அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக" என்று கூறினார் (யாத். 25:8). தேவன் சீனாய் மலையின்மேல் தனக்குக் காண்பித்த மாதிரியின்படி, மோசே, கூடாரத்தையும் அதன் சகல பணிமுட்டுகளையும், ஜனங்கள் கொடுத்த மனப்பூர்வமான காணிக்கைகளைக் கொண்டு உண்டுபண்ணினான். இந்த ஆசரிப்புக் கூடாரம் பரலோகத்திற்கு நிழலாயிருந்தது. ஆசரிப்புக் கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவன் வாசம்பண்ணினார். இஸ்ரவேலரின் பாளயம் புறப்பட்டுப் போகும்போதெல்லாம் அவர்கள் கூடாரத்தைப் பெயர்த்து தங்களுடன் சுமந்து செல்வார்கள். இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசித்தபோது இது. யோசுவாவினால் சீலோவிலே நிறுவப்பட்டது (யோசுவா 18:1).

3. **சாலொமோனின் தேவாலயம்:** இது ஆசிரிப்புக் கூடாரத்தைக் காட்டிலும் பன்மடங்கு பெரியதாய் மோரியா மலைமீது கட்டப்பட்டது (II நாளா. 3:1). ஈசாக்கை ஆபிரகாம் பலி செலுத்தின மலை இதுவே. பல வருடங்களுக்குப் பின் கி.மு.588 -இல் இவ்வாலயம் பாபிலோனிய இராஜாவால் இடித்து நாசம் செய்யப்பட்டது: யூதர்களும் சிறையாகக் கொண்டு போகப்பட்டனர்.

4. **செருபாபேலின் தேவாலயம:** பின்பு பாபிலோனின் வல்லமை குறைந்து, பாபிலோனிய பேரரசு பெர்சிய இராஜாக்கள் வசமானது. ஏற்க்குறைய ஐம்பத்திரண்டு வருடங்களுக்குப் பின் கோரேஸ் இராஜாவின் காலத்தில் அநேக யூதர்கள் ஒன்று சேர்ந்து செருபாபேலின் தலைமையில் எருசலேமுக்கு வந்து, இராஜாவின் கட்டளையின்படியே தேவாலயத்தைத் திரும்பவும் கட்டினார்கள். பல எதிர்ப்புகளின் மத்தியில் செருபாபேலின் ஆலயம் கி.மு. 515 - இல், அதாவது யூதர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு எழுபத்து மூன்று வருடங்களுக்குப் பின்பு கட்டி முடிக்கப்பட்டது (எஸ்றா 6:15).

5. **ஏரோதின் தேவாலயம்:** நாளடைவில் அழிந்து போன செருபாபேலின் ஆலயம் மீண்டும் ஏரோதினால் கட்டப்பட்டது அவன் இயேசு பிறப்பதற்கு நாற்பது வருடங்களுக்கு முன் அவ்வேலையைத் துவங்கினான். அதைக் கட்டி முடிக்க மொத்தம் நாற்பத்தாறு வருடங்கள் ஆனது (யோவான் 2:20). இயேசு பூமியில் இருந்து நாட்களில் ஆலயம் இதுவே. ஆனால் கி.பி. 70 - இல் தீத்து இராயனுடைய நாட்களில, ரோமரால் இது தரையோடு தரையாய் உழப்பட்டது (மத். 24:2).

**மனப்பாடம்:** ஏசாயா 57:15

## பாடம் 20

## தேவனுடைய வாசஸ்தலங்கள்

(பகுதி II)

முந்தின பாடத்தில் கண்களுக்குப் புலப்படக்கூடிய ஆலயங்களை அல்லது பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலங்களைக் குறித்து நாம் ஆராய்ந்தோம். இருப்பினும், தற்போது தேவன் ஆவிக்குரிய ஒரு வாசஸ்தலத்தைக் கட்டி எழுப்பிக் கொண்டிருக்கிறார். முந்தின ஆலயங்களெல்லாம் இதற்கு நிழலாட்டமாயிருக்கின்றன. கிறிஸ்துவும், பரிசுத்தாவியானவரும் இவ்வாலயத்தைக் கட்டுகிறார்கள்.

**புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலம்:**

1. **பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி - தேவனுடைய ஆலயம்:** புதிய ஏற்பாட்டில் தேவன் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிரார். நம்முடைய சரீரமே பரிசுத்தாவியின் ஆலயமாயிருக்கிறது (I கொரி. 3:16,17 : 6:19). நாம் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறும்போது தேவனுடைய ஆலமாகிறோம்: ஆவியமாயிருக்கிற தேவன் நமக்குள் வந்து வாசம் செய்கிறார்.

2. **சபை - தேவனுடைய வாசஸ்தல்:** பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் சேர்ந்து அமையும் புதிய ஏற்பாட்டு சபையில் தேவன் வாசம் பண்ணுகிறார் (எபே. 2:22). ஒரே ஆவியினாலே நாம் எல்லாரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம் (I கொரி. 12:13). அந்த சபை, அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மீது கட்டப்படுகிறது: இயேசு கிறிஸ்து அதற்கு மூலைக்கல்லாயிருக்கிறார். “அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது” (எபே. 2:20,21). பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற ஜனங்கள் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறார்கள்.

**சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு பூமியில் எழுத்திற்குரிய ஆலயங்கள்:**

1. **உபத்திரவ காலத்தின் ஆலயம்:**

இது முதல் மூன்றரை வருட உபத்திரவ காலத்தில் யூதர்களால் கட்டப்படும் ஆலயம். அக்காலத்தில் யூதர்கள் அந்திக்கிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்திருப்பர். முதல் மூன்றரை வருட முடிவில் அந்திக்கிறிஸ்து ஆலயத்திற்குள் பிரவேசித்து. அதைத் தீட்டுப்படுத்துவான் (II தெச. 2:4). அப்போதுதான் யூதர்கள் தங்கள் குற்றத்தை உணர்ந்து, இயேசுவிடம் திரும்புவார்கள், ஏழு வருட உபத்திரவ காலத்தின் முடிவில் இவ்வாலயம் அழிக்கப்படும்.

2. **ஆயிர வருட அரசாட்சி காலத்தின் தேவாலயம்:**

ஆயிர வருட அரசாட்சியின் காலத்தின் மற்றொரு ஆலயம் கட்டப்படும் (ஏசாயா 2:2,3 : சக. 14:16-21: எசே. 37:22-28). ஆயிரவருட அரசாட்சியில் ஜீவிக்கிறவர்கள், சேனைகளின் கர்த்தராகிய இராஜாவைத் தொழுதுகொள்ளும் படிக்கு வருஷாவருஷம் அங்கு வருவார்கள் (சக. 14:16).

ஆயிரவருட அரசாட்சிக்குப்பின். இந்தப் பூமியும் வானமும் ஒழிந்து போகும்: நித்தியம் துவங்கும்.

**நித்தியத்தில் தேவனுடைய வாசஸ்தலம்:**

**புதிய எருசலேமும் சீயோனும்:**

கிறிஸ்துவின் மணவாட்டியாகிற பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் வரப்போகிற நித்தியத்தில் தேவனுடைய நித்திய வாசஸ்தலமாகிய புதிய எருசலேமாகவும் சீயோனாகவும் இருப்பார்கள் (வெளி. 21:2,3 : சங். 132:13,14).

**மனப்பாடம்**: எபேசியர் 2:19-22